# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report



# 2013

ශ්‍රී ලංකා මිනින්දෝරු දෙපාර්තමේන්තුව

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

Survey Department of Sri Lanka

# பொருளடக்கம்

01. முன்னுரை
- 1.1 தொலை நோக்கு
- 1.2 குறிக்கோள்
- 1.3 நோக்கங்கள்
- 1.4 செயற்பாடுகள்

02. தாபன அமைப்பு முறை - இணைப்பு - 08

03. மனித வள முகாமைத்துவம்
- 3.1 அலுவலர்கள் - இணைப்பு - 01
- 3.2 இடமாற்றங்கள்
- 3.3 தாபன விடயங்கள் - இணைப்பு - 02
- 3.4 மனித வள அபிவிருத்தி -
- 3.5 இணைப்பு - 03
- 3.6 தரவுமுறையிலான முகாமைத்துவம், கணனி சேவைகள்
- 3.7 உத்தரவுப்பத்திரம் வழங்கல்

04. நிதி முகாமைத்துவம்
- 4.1 செலவின மதிப்பீடுகள் - இணைப்பு - 04
- 4.2 முற்பணக் கணக்கு“ பி ” -இணைப்பு - 05
- 4.3 வருமானக் கணக்கு - இணைப்பு - 06

05. பௌதீக வளங்கள் முகாமைத்துவம்
- 5.1 அசைவற்ற அசைவுள்ள சொத்துக்களின் முன்னேற்றம் - இணைப்பு - 07
- 5.2 அளவையியல் உபகரணங்களைப் பேணிப் பழுது பார்த்தல் மற்றும் நிர்மாண வேலைகள்
- 5.3 வாகனங்கள், பொறித்தொகுதிகளின் பராமரிப்பு
- 5.4 பெறுகைகள் மற்றும் வழங்கல் கிளை

06. அபிவிருத்திச் செயற்பாடுகள்
- 6.1 காணி அளவைகள்
- 6.2 புவிப்பாத்த அளவைகள்
- 6.3 படமாக்கல்
- 6.4 புவியியல் பெயர்கள் கிளை
- 6.5 ஆவண முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் நியமங்கள் கிளை
  - 6.5.1 காணி உரித்து வரைபடங்கள் வழங்கல்
  - 6.5.2 நீதிமன்றக் கட்டளை அளவைகள்
  - 6.5.3 இறுதிக் கிராமப் படங்கள், இறுதி பிரதேசவியல் படங்கள் தயாரித்தல்
  - 6.5.4 பழைய பதிவேடுகளை நாளது வரைவுபடுத்தல்
  - 6.5.5 சுவடுவரை படங்கள் மற்றும் வரிப்படங்களை வழங்குதல்
  - 6.5.6 பழைய வரைபடங்களைப் பாதுகாத்தல்
  - 6.5.7 நில அளவைகளுக்குத் தேவையான தகவல்களை வழங்கல் (L - 96)
  - 6.5.8 உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்குதல்

07. காணித் தகவல் முறைமை / பூகோளத் தகவல் முறைமை கிளை
- 7.1 வான் அளவைகள்
- 7.2 தொலையுணர்வு தொழில்நுட்பம்
- 7.3 காணித் தகவல் முறைமை
- 7.4 பூகோளத் தகவல் முறைமை

08. அளவைப் பயிற்சி நிறுவனம்
- 8.1 இவ்வாண்டில் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகள்
  - 8.1.1 கிரமமான பயிற்சி நெறிகள்
  - 8.1.2 குறுகிய காலப் பயிற்சி நெறிகள்
  - 8.1.3 ஏனைய நிறுவனங்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி நெறிகள்
- 8.2 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புவிப்பாத்தக் கிளையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்
- 8.3 2013 ஆம் ஆண்டில் பரீட்சைக் கிளையினால் நடாத்தப்பட்ட பரீட்சைகள்

09. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

10. காணி உரித்துக் கிளை

11. கணக்காய்வு

12. முன்னேற்றக் கிளை

13. ஏனைய தொடர்புடைய விடயங்கள்
- 13.1 பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகள்
- 13.2 ஊழியர்களின் சேமநலன்கள்

14. முடிவுரை

# நில அளவையாளர் நாயகத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை.

## 1.0 முகவுரை

1800 ஆகஸ்ட் 02 ஆம் திகதி காலியில் பிறப்பிக்கப்பட்ட ஆளுநர் பிரடரிக்நோர்த் அவர்களது பிரகடனம் வாயிலாக இலங்கை நில அளவைத்திணைக்களம் நிறுவப்பட்டது. அக்காலப்பகுதியிலே நில அளவைச் செயற்பாடுகளுக்கு நவீன தொழில் நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது ஆர்.எல்.புறோஹியர்மற்றும் ஜே.எச்.ஓ. போலுஸ் ஆகியோர் எழுதிய Land, Maps & Surveys எனும் நூலின் 15 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று முதல் இன்று வரையான திணைக்களத்தின் கடந்த 213 வருட கால வரலாற்றில் அத்தகைய நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வரைபடங்களையும் மற்றும் கிடைப்படங்களையும்வெற்றிகரமாகத் தயாரித்து வழங்கியுள்ளது.காணி அளவைகளில் முன்னோடியாகத் திகழ்ந்ததோடு அரசாங்க அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் முன் ஏற்பாட்டாளராக விளங்கி பாராட்டைப்பெற்றுள்ளது. இது உண்மையில் அதன் ஊழியர்களுக்கு பெருமையளிக்கிறது.

காணி அளவைக்காகவும் படமாக்கலுக்காகவும் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள ஒரே தேசிய நிறுவனம் நிலஅளவைத்திணைக்களமாகும். அதே போல் புவித் தகவல்முறைமை மற்றும் தொலையுணர்வுத் தொழில்நுட்பம் குறித்த மத்திய நிலையமும் இலங்கை நில அளவைத் திணைக்களமாகும். இக்காரணத்தால் பூகோளப் படமாக்கல் பற்றிய சர்வதேச நிர்வாக நிறுவனத்தால் ஒழுங்குசெய்யப்படும் பூகோளப்படமாக்கல்செயற்திட்டத்தின் முகவர் நிறுவனமாக இலங்கை நில அளவைத் திணைக்களம் நியமிக்கப்பட்டிருப்பது எமக்குப்பெரும் கௌரவமாகும்.

நாட்டில் சமாதானம் உதயமானதோடு குறிப்பாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம், புனருத்தாரணம்,மீள்நிர்மாணம் போன்ற பணிகளுக்குப் பாரிய பங்களிப்பை வழங்கவும் திணைக்களத்தால் முடிந்தது. மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை முன்கொண்டுசெல்ல திணைக்களம் பல்வேறு விதங்களிலும் அரசின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்குத் தோள்கொடுத்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகள், பாதைகளை அகலமாக்குதல், விமானநிலையம், துறைமுகம் போன்றவற்றை ஆரம்பித்தல், சுற்றுலாச் செயற்றிட்டங்கள், மின்சக்தி மற்றும் மின்வலுச்செயற்றிட்டங்கள் முதலான மகிந்த சிந்தனையுடன் தொடர்புடைய முக்கிய அம்சங்களுக்கெல்லாம் அடிப்படைத் தேவையான காணிளை அளந்து கிடைப்படங்களைத் தயாரித்து வழங்கியதன் மூலம் தேசிய அபிவிருத்தியின் முன்னோடி நம் திணைக்களமே என்பதை நிரூபித்த வண்ணம், அப்பணிகளை நன்கு பூர்த்தி செய்யவும் முடிந்துள்ளது. மேல்கொத்மலை நீர்மின்நிலையம்,மொரகஹகந்தை மற்றும் களுகங்கைபலநோக்கு நீர்ப்பாசனத்திட்டங்கள், கொழும்பு - கண்டி அதிவேகப்பாதை, கொழும்புக்கப்பால் சுற்றுவட்டப் பாதை, சம்பூர் - வேலூர் அனல் மின்நிலையம், மத்தல சர்வதேச விமான நிலையம், உமா ஒயா பன்முகச்செயற்றிட்டம், களுகல் ஒயாத்திட்டம் ஆகியன.

மேலும் காணி உரித்துச் சான்றிதழ்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படும் பிம்சவிய வேலைத் திட்டத்திற்காக காணிகளை அளவைசெய்து “கடத்திரள் வரைபடங்கள்” தயாரித்து வழங்குதல் மூலம் அதற்கான உயிர்ப்பான பங்களிப்பை நல்கி வருகிறது.

அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பணிகளின் அனுகூலங்களைப் பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தினால் அளிக்கப்பட்ட காணிகளின் கிடைப்படங்களின் பிரதிகளை ஸ்கான்செய்து இணையத்தளம் ஊடாக மக்கள் சுலபமாகக் காண வசதி செய்யும் பொருட்டு அத் தகவல்களை இணையத்தளத்தில் இணைப்பது 2013 ஜூலை 19 ஆம் திகதி வெகுவிமர்சையாக நடைபெற்றது. அதே நாள் இலங்கைச் சாலைத் தொகுதிக்குரிய எண் முறைத் தரவுகளை இணையத்தளத்திற்கு விடுவித்தலும் சமநேரத்தில் நிகழ்ந்தது. இது வரை தமது கிடைப்படங்களை

பரிசீலிக்கச்செல்கையில் மக்கள் எதிர் நோக்கிய பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கும் எண்ணத்தில் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இச் செயற்றிட்டம் கொழும்புமாவட்ட நில அளவை அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட கிடைப்படங்களை இணையத் தளத்திற்கு விடுவிப்பதன் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.நில அளவைத் திணைக்களத்தின் www.survey.gov.lk இணையத் தளத்தில் நுழைவதன் மூலம் இத்தகவல்களைப் பார்வையிட முடியும்.

வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு இத் திணைக்களம் வழங்கும் சேவைகளைச் சுலபமாகப் பெற்றுக் கொடுக்கவும், அபிவிருத்திப் பணிகளுக்குப் பங்களிக்கவும் புதிய மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்களை நிறுவும் தேவை ஏற்பட்டதால்,கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தைக் கடந்த ஆண்டிலும், மன்னார் மாவட்ட அலுவலகத்தை இவ்வாண்டிலும் திறக்க முடிந்தது.அதேபோல்யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்திற்கான புதிய கட்டடமும் விரைவில் திறக்கப்படவுள்ளது.

இலங்கைத் தொழில்நுட்ப சேவை அலுவலர்கள் 95 பேரை ஆட்சேர்ப்புச் செய்தமையால் திணைக்களநடவடிக்கைகளை கிரமமாக மேற்கொள்வதற்கான மனித வளத்தை மேம்படுத்திக் கொள்ள முடிந்தது.

தனது தேசப்படத் தொகுதியை 1988ல் வெளியிட்டதன் மூலம் இவ்வாறான தேசப்படத் தொகுதிகள் கொண்ட ஒரு சில நாடுகளுடன் இலங்கைக்கும் இணைந்துகொள்ள முடிந்ததுடன், நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட அதன் இரண்டாம் பதிப்பின் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்புகளின் முதற் தொகுதி 2013 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி காணி காணி அபிவிருத்தி அமைச்சில் அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் அதன் இரண்டாம் தொகுதி 2014 முதற் காலாண்டில் வெளி யிடப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 1.1 தொலை நோக்கு

“காணித்தகவலில் என்றுமே தலைமைத்துவம் வகிப்பது” எமது தொலை நோக்காகும்.

## 1.2 குறிக்கோள்

தொழில் நிபுணத்துவமும் அர்ப்பணிப்பும் உள்ள ஆளணி மூலம் உயர் தரம் வாய்ந்த காணித்தகவல் சாதனங்களையும், சேவைகளையும் வழங்குவதாகும்.

## 1.3 நோக்கங்கள்

நிலஅளவைத் திணைக்களத்தின் செயற்பாடுகள், கொழும்பு தலைமையகக் கட்டுப்பாட்டின் கீழ் நாடு முழுவதிலுமுள்ள மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள், பிரதேச அலுவலகங்கள் மற்றும் நிலஅளவைப் பயிற்சி, அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை என்பவற்றை உள்ளடக்கியதான அலுவலக வலையமைப்பொன்றினூடாக மக்களின் நலனை கருத்தில் கொண்டு வழிநடத்தப்படுகின்றது. குறித்த ஆண்டு காலப் பகுதியில் இவ்வலுவலகங்களின் செயற்பாடுகள் பின்வரும் நோக்கங்களைக் கொண்டிருந்தன.

- வருடாந்த நிலஅளவைப் பயிற்சி, அளவைப் படமாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தியாக்குதல்.
- அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- இவ்வாண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அசைவுள்ள மற்றும் அசைவற்ற வளங்களை உருவாக்குவதும், அவற்றைப் பேணிப் பாதுகாப்பதும்.
- ஒதுக்கப்பட்ட அரசாங்க நிதியை இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளுக்குப் பகிர்ந்தளித்தல்.
- ஒழுக்காற்றைப் பேணுதல் மற்றும் திணைக்கள ஊழியர்களின் சேமநலன்களைக் கவனித்தல்.
- நிலஅளவைத் தொழிலில் உயர் தொழில்சார் தரக்கட்டுப்பாட்டினைப் பேணுதல்.

## 1.4 செயற்பாடுகள்

- நாடு முழுவதிலும் புவிப்பாத்த பாலன வலையமைப்பு ஒன்றை ஏற்படுத்திப் பராமரித்தல்.
- சகல நியதிச்சட்ட முறையான தேவைகளுக்கும் அளவையியல் சேவைகளை வழங்குதல்.
- படமாக்கலுக்கும், அபிவிருத்தித் திட்டமிடலுக்கும் வேண்டிய வான்முறை ஒளிப்படங்களை பெற்றுக்கொள்ளுதல்
- தேசிய தேவைகளுக்கான பிரதேசவியல் வரைபடங்கள் , சுவாத்தியமாக்கல் வரைபடங்கள் மற்றும் விசேட தேவைகளுக்கான வரைபடங்கள் போன்றவற்றை தயாரித்து வழங்குதல்.
- நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக பூகோளத் தகவல் முறைமை ஒன்றை தயாரித்தல்
- நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக ஒழுங்கு முறையான காணித்தகவல் முறைமை ஒன்றை தயாரித்தல்
- செய்மதி விம்ப தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூகோள மற்றும் காணித் தகவல்களைப் பெறுதல்
- நில அளவை உயர் தொழில்சார் தரங்களை ஒழுங்கு படுத்திப் பேணுதல்.
- திணைக்களத் தேவைக்கேற்ப அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- நில அளவையியல் தொடர்பாக அரசாங்க நிறுவனங்களுக்கு நிபுணத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- திணைக்கள ஊழியர்களுக்கு அவர்களுக்குரிய பரீட்சைகளை நடத்துதல்.
- நிலஅளவை தொடர்பான விவகாரங்கள் குறித்து தேவைப்படும் போது அத்தகைய ஆராய்ச்சிகளை நடத்துதல்.
- 1998 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க உரித்துப் பதிவு சட்டத்தின் கீழ் நிலஅளவைகளை மேற்கொள்ள விரும்பும் பதிவு செய்து கொண்ட நிலஅளவையாளர்களுக்கு உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை வழங்குதல்.



கொழும்பு மாவட்ட நில அளவை அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட கிடைப் படங்கள் இணையத்தளத்தில் இணைக்கப்படும் வேளை

## 2.0 தாபன அமைப்பு

நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தின் செயற்பாட்டுத் தரத்தைப் பேணுவதற்குப் பொறுப்பாக உள்ளார். அவரின் அதிகாரங்கள் பல்வேறு தரப்பட்ட உயர்மட்ட உத்தியோகத்தர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 08 ஐப் பார்க்கவும்)

## 3.0 மனித வள முகாமைத்துவம்

திணைக்களத்திற்கு பயிலுனர் வரைபடத் தொழில்நுட்ப **உத்தியோகத்தர்கள்** 86 பேரும் பயிலுனர் ஒளிப்படவியலாளர்கள் 07 பேரும் பயிலுனர் வான் ஒளிப்பட ஆய்வு **கூட** தொழில் நுட்ப வியலாளர்கள் 02 பேரும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.






மாண்புமிகு காணி காணி அபிவிருத்தி அமைச்சரால் 2013..02.19 ஆம் திகதி இலங்கைத் தொழில் நுட்பச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படுதல்

## 3.1 அலுவலர்கள்

திணைக்கள உத்தியோகத்தர்களின் சகல விபரங்களும் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளது. இவ்வாண்டிலும் கடந்த வருடத்தைப்போல் பல்வேறான சேவைகளில், பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை காணப்படவில்லை. எனினும் இவ்வாண்டில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அரசாங்கம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்ததன் விளைவாக எழுந்த மேலதிக மற்றும் அவசரமான வேலைகள் என்பன கஷ்டங்களின் மத்தியிலும் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (இணைப்பு 01 ஐப் பார்க்கவும்)

## 3.2 இடமாற்றங்கள்.

திணைக்கள சேவையைச் சேர்ந்த மாகாண நிலஅளவையாளர் நாயகங்கள், சிரேஷ்ட பிரதி நிலஅளவையாளர் நாயகங்கள், பிரதி நிலஅளவையாளர் நாயகங்கள், சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர்கள், நிலஅளவை அத்தியட்சகர்கள், அரசாங்க நிலஅளவையாளர்கள், தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர்கள்,வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், நிலஅளவைக் கள உதவியாளர்கள் மற்றும் திணைக்கள தொழிலாளர்களின் வருடாந்த இடமாற்றங்கள் உரிய நடைமுறைகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டது. மேலும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றமும் இணைந்த சேவையின் இடமாற்றப் பணிப்புரைகளுக்கமைய திணைக்களத்தினுள் மேற்கொள்ளப் பட்டது.

இதன் படி இலங்கை நிர்வாகச் சேவையின் சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் (நிர்வாகம்) பதவி வகித்த ஓர் உத்தியோகத்தர். இலங்கைக் கணக்காளர் சேவையின் உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவி வகித்த ஓர் உத்தியோகத்தர், மொழிபெயர்ப்பு உதவியாளர் ஒருவர், இணைந்த சேவைசார் அரச முகாமைத்துவ உதவியாளர்கள் 10பேர் சாரதிகள் 07 பேர் அலுவலகசேவகர்கள் 07 பேர் இடமாற்றம்பெற்றுச் சென்றதோடு மேலதிக நில அளவையாளர் நாயகம் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) பதவிக்கு இலங்கை நிர்வாக சேவைசார் விசேட வகுப்பு உத்தியோகத்தர் ஒருவரும், மொழிபெயர்ப்பாளர் ஒருவரும், அரச முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை உத்தியோகத்தர் 10 பேரும், சாரதி சேவைசார் 02 பேரும், அலுவலக சேவகர் 20 பேரும் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தனர்.

## 3.3 தாபன விடயங்கள்

இவ்வாண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பல்வேறு பதவிகளில் பற்றாக்குறை நிலவியது. அவ்வாறிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் போன்ற தாபன விடயங்கள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இணைப்பு – 02 ஐப் பார்க்கவும்)

## 3.4 மனித வள அபிவிருத்தி

கடல்கடந்த பயிற்சி நெறிகளுக்காக வழங்கப்பட்ட 19 பயிற்சிநெறிக்கான சந்தர்ப்பங்களில் 16 பயிற்சி நெறிகள் மிகவும் குறுகிய காலப் பயிற்சிகளாகவே இருந்துள்ளன. எனினும் 40 குறுகிய கால பயிற்சிநெறிகளில் 292 உத்தியோகத்தர்களும், 06 நீண்டகால உள்ளூர் பயிற்சிநெறிகளில் 07 உத்தி யோகத்தர்களும் பங்குபற்றியுள்ளனர். (இணைப்பு - 03 ஐப் பார்க்கவும்.)

இந்த பயிற்சி நெறிகள் நவீன தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய ஏனைய துறைகளிலும் அறிவை விருத்தி செய்து திணைக்களத்தின் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்த பெரிதும் உதவியுள்ளது.

## 3.5 தகவல் தரவுத்தள முகாமைத்துவமும் கணனிச் சேவைகளும்

மனிதவள முகாமைத்துவம், தரவுகளை கணனிமயப்படுத்துதல், நிதிமுகாமைத்துவம் மற்றும் தகவல்களை விரைவாகவும் கிரமமாகவும் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக இவ்வாண்டில் புதிய தகவல் தொழில்நுட்ப முறைகளும், கணனிகளும் திணைக்களத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது. அதற்கு மேலும் இணையத்தளம், மின்னஞ்சல் என்பவற்றினூடாக அனைத்துலக அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் , திணைக்கள அறிவுறுத்தல்களை மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்திலுள்ள பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு துரிதமாகவும், கிரமமான ஒரு முறையிலும் வழங்குவதற்குமாக இதன் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

தலைமை அலுவலகத்தில் உள்ள சகல கணனிகள் மற்றும் உள்ளக வலையமைப்புகள் (LAN), அதனுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்கள் என்பனவற்றின் பிரச்சினைகளை இனம் காணுதல் மற்றும் பராமரிப்புச் சேவைகள் என்பன கடந்த வருடத்தைப் போன்று இவ்வாண்டும் இக்கிளையினாலேயே மேற்கொள்ளப்பட்டது. மேலும் இவ்வாண்டில் இவற்றில் பெரியளவிலான பிழைகள் எதுவும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. அதற்கப்பாலும் திணைக்களத்திற்குச் சொந்தமான கணனிகள், பிரயோக மென்பொருள் கொள்வனவு மற்றும் கணனியின் உதிரிப் பாகங்கள் தொடர்பான சகல தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகள் என்பவற்றை இக்கிளை வேண்டியபொழுதெல்லாம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சியான நாளது வரைவுபடுத்தல் முறையினூடாக மனிதவள தகவல் முறைமை திருப்திகர மாகப் பேணப்பட்டு வரும் அதேசமயம் அத்தகைய தகவல்களை மாகாண மட்டத்திலும் பெறக்கூடியதாக மாகாண அலுவலகங்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. மாகாண மட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட அரசாங்க சம்பளப் பட்டியல் முறைமையானது நாளாந்த நாளது வரைபடுத்தல் முறைமைக் கான ஒரு மூலாதாரமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

திணைக்களத்தின் இணையத்தளமானது திணைக்கள உத்தியோகத்தர்களினால் பேணப்பட்டுவருவதுடன், தொடர்ச்சியாக நாளது வரைப்படுத்தப்பட்டும் வருகிறது. அதேசமயம் சர்வதேசப் பொதுக் குறிகாட்டியான (UniformReferenceLocater) ஸ்ரீலங்கா ரெலிகொம் சேவையகத்துடன் இணைந்து http://www.survey.gov.lk எனும் இணையத்தள முகவரி பயன்படுத்தப்பட்டு வருகிறது. நிலஅளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் நாளாந்த வருகையை பதிவு செய்யும் செயற்பாடானது இக் கிளையினால் மேற்கொள்ளப்படுகிறது.

வைரஸ் பிரச்சனைகளிலிருந்து தரவுகளையும், தகவல்களையும் பாதுகாப்பதற்கு திணைக்களத் திலுள்ள சகல கணனிகளுக்கும் கஸ்பெர்ஸ்கி (Kaspersky) வைரஸ் தடுப்பு மென்பொருள் முறைமை இணைக்கப்பட்டு பராமரிக்கப்படுவதுடன், வேண்டியபோதெல்லாம் வைரஸ் பிரச்சனைகளை நீக்குவதற்கு அவசியமான பிரச்சனைகளை இனம் காணும் செயற்பாடுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கு மேலாக திணைக்களத்தின் சகல கணனிகளிலும் மற்றும் உதிரிப்பாகங்களிலும் வன்பொருள், மென்பொருள் பிரச்சனைகளை இனம் காண்பதற்கான நிபுணத்துவ ஆலோசனை சேவைகளும் வழங்கப்படுகின்றன.

மனித வளத் தகவல் முறைமைக்கு (HuRIS) மேலதிகமாக, திணைக்கள சுற்றிக்கைகள், திணைக்கள ரெலிகொம் தொலைபேசி விபரக்கொத்து, அரசாங்க நிர்வாக / அரசாங்க நிதி சுற்றறிக்கைகள், மற்றும் அரசாங்க களஞ்சியப்பொருட்கள், வாகனங்கள், திணைக்கள கணனிகள் போன்ற திணைக்கள வளங்கள் என்பவற்றுக்கான தகவல் தரவு தளமும் நிர்வாக முறைமைக்கான ஓர் ஆதாரமாகப் பேணப்பட்டு வருகின்றன.

**மேலதிகமாகத் திணைக்களத் தேவைகளுக்கமைய பின்வரும் பணிகளின் பொருட்டு உள்ளகமென்பொருள் ( ) விருத்திசெய்யப்பட்டது.**

- **தலைமையலுவலக பெறுனர்கள் வழங்கல்கள் கிளைக்கென களஞ்சியத் தகவல்களுக்கும் அவற்றின் மேற்பார்வைக்கும்.**
- **நில அளவைத் திணைக்கள அளவையியல் படமாக்கல் நிறுவனத்திற்காக பரீட்சைத் தகவல்தொகுதியை அமைத்தல்.**
- **அளவைக் கோரிக்கைத் தகவல்ளையும் அதனை மேற்பார்வை செய்யவும் தயாரித்த மென்பொருளின் இறுதிக் கட்டப் பணிகள்**

## 3.6 உத்தரவுப்பத்திரம் வழங்கல்

3.6.1. அங்கீகரிக்கப்பட்ட படவரைஞர்களாக நிலஅளவையாளர் நாயகத்தின் சான்றிதழ் வழங்குதல் - அட்டவணை 8.3 ஐப் பார்க்கவும்.

3.6.2 உத்தியோகபூர்வ அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல் - பந்தி 6.4.8 ஐப் பார்க்கவும்.

2002 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க நிலஅளவைச் சட்ட நியதிகளின்படி, நிலஅளவைச் சபையினால் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்களுக்கு வருடாந்த தொழில்புரியும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

## 4.0 நிதி முகாமைத்துவம்

திணைக்களத்தின் கணக்கீட்டு முறைமை தலைமை அலுவலகம் , 09 மாகாண நிலஅளவையாளா் நாயகம் அலுவலகங்கள், 24 மாவட்ட நிலஅளவை அலுவலகங்கள், நிலஅளவைப் பயிற்சி , அளவைப் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை என்பன உள்ளடங்களாக 33 கொடுப்பனவு அலுவலகங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் நிதிசாா் விடயங்கள் இணைப்புகள் 04, 05, 06 என்பனவற்றில் காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 4.1 | செலவின மதிப்பீடுகள் | - | இணைப்பு - 04 |
| 4.2 | முற்பணக் கணக்கு “பி” | - | இணைப்பு - 05 |
| 4.3 | வருமானக் கணக்கு | - | இணைப்பு - 06 |

## 5.0 பௌதீக வள முகாமைத்துவம்

நில அளவைத்திணைக்களம் சொந்தமான கட்டடங்களில் தனது தலைமை அலுவலகம், தியத்தலாவை பயிற்சி மற்றும் அளவைப்படமாக்கல் நிறுவனம், 08 மாகாண நில அளவையாளர்நாயகம் அலுவலகங்கள், 23 மாவட்ட நில அளவை அலுவலகங்கள் ஆகியவற்றை திணைக்களத்தின் பௌதிக வளங்களாகக் கொண்டுள்ளது. 34 பிரதேச நிலஅளவை அலுவலகங்கள் திணைக்களம் மற்றும் அரச சார் கட்டடங்களில் செயற்படுவதோடு 58 பிரதேச நில அளவை அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடங்களில் செயற்படுகின்றன.ஆகையால் இவ் அலுவலகங்களுக்காகவும் புதிய கட்டிட நிா்மாண வேலைகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இது தவிர அலுவலகா்களுக்கான தங்கும் விடுதிகள், விடுமுறை விடுதிகள், சுற்றுவட்டப் பங்களாக்கள் என்பனவும் திணைக்களத்தின் வளங்களாக உள்ளன.

2013 ஆம் ஆணடில் நில அளவையாளர் நாயகத்தின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம், மன்னார், கிளிநொச்சி மாவட்ட நில அளவை அலுவலகங்கள் ஆகியனவும் திணக்கள பௌதிக வளங்களாக இணைந்து கொண்டன. யாழ்ப்பாண மாவட்ட நிலஅளவை அலுவலகத்திற்கான கட்டடமும் தற்போது கட்டப்பட்டு வருகிறது.

### 5.1 பௌதீகவள அபிவிருத்தி - 2013

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிா்மாண மற்றும் திருத்த வேலைகள் ஒவ்வொன்றுக்குமாக ரூபா50,000/= ற்கு மேல் செலவிடப்பட்ட செலவினம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | மாகாணம் | விபரம் | செல வினம் |
|---|---|---|---|
| 1. | மேல் மாகாணம் | கம்பஹா மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கென காவல்குடில் பெயர்ப் பலகை, சுவர் அலுமாரிகள் தாபித்தல். | 84,250.00 |
| 2. | சப்ரகமுவ மாகாணம் | புதிய கட்டடத்திற்கும் வீட்டுத்தோட்டத்திற்கும் இடையிலான ஒவ்வொரு பகுதிக்கும் இணைப்புப் பாதைகள் அமைத்தல் | 55,375.00 |
| 3. | | மாவட்ட நில அளவை அலுவலகத்தில் பிரிவுகள் வேறாக்கல் | 582,400.00 |
| 4. | | உள்ளகத் தொலைபேசித் தொகுதி நிறுவுதல் | 50,288.00 |
| 5. | | இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தில் யன்னல்களுக்கு கிறில்கள் பொருத்துதல் | 70,300.00 |
| 6. | | இரத்தினபுரி பிரதேசக் காரியாலயத்திற்கு ஆதார மதில் நிறுவுதல் | 177,370.00 |
| 7. | | 75 ம் இலக்க உத்தியோக பூர்வ இல்லத்தைத் திருத்துதல் | 104,873.20 |
| 8. | | 4/7 இலக்க உத்தியோக பூர்வ இல்லத்தைத் திருத்துதல் | 131,235.00 |
| 9. | | நில அளவை அத்தியட்சகரது உத்தியோக பூர்வ இல்லத் திருத்த வேலை | 83,279.00 |

| | | | |
|---|---|---|---|
| 10. | | ஆவண அறையில் நிலைத் தட்டுக்கள் அமைத்தல் | 89,999.00 |
| 11. | வட மத்திய மாகாணம் | மாகாண அலுவலகத்திற்கான வாகன தரிப்பிடத்தை மேம்படுத்தல் | 51,031.65 |
| 12. | | அநுராதபுர மாவட்ட அலுவலக உணவறையைத் திருத்துதல் | 59,311.00 |
| 13. | | 37ம் இலக்க பொருத்தியமைக்கும் கொட்டகை யைத் திருத்துதல் | 853,339.50 |
| 14. | | பொலநறுவை மாவட்ட அலுவலகத்திற்கு வாகனத் தரிப்பிடம் அமைத்தல் | 98,000.00 |
| 15. | | பொலநறுவை மாவட்ட அலுவலக முன்புற மதிலைத் திருத்துதல் | 206,000.00 |
| 16. | | ஆவண அறையில் நிலைத் தட்டுக்கள் அமைத்தல் | 196,000.00 |
| 17. | வடமேல் மாகாணம் | அளவையாளர் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு புதிய குழாய்த் தொகுதி பொருத்துதல் | 77,337.96 |
| 18. | | மாவட்ட அலுவலக உட்கூரையை மீளமைத்தல் | 232,500.00 |
| 19. | மத்திய மாகாணம் | ஓய்வறையை ஒட்டிய குளியலறையைத் திருத்துதல் | 195,255.35 |
| 20. | | மாத்தளை மாவட்ட அலுவலகக் கூரையைத் திருத்துதல் | 58,000.00 |
| 21. | தென் மாகாணம் | எல்பிட்டி பிரதேச அலுவலகத்திற்கு வர்ணம் தீட்டல் | 211,055.00 |
| 22. | | அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச அலுவலகத் திருத்தப் பணிகள் | 63,700.00 |
| 23. | | மாகாண அலுவலக உணவறையைத் திருத்திய மைத்தல் | 152,972.00 |
| 24. | | மகளிர் கழிவறையைத் திருத்துதல் | 163,415.00 |
| 25. | வட,கிழக்கு மாகாணங்கள் | திருகோணமலை மாவட்ட நிலஅளவை அலுவலகம்,ஆவணஅறை,வரைபடவிற்பனைப் பிரிவு ஆகியவற்றை வேறுபடுத்தியமைத்தல் | 537,073.50 |
| 26. | ஊவா மாகாணம் | மொனராகலை மாவட்ட அலுவலக சுவர் அலுமாரிகள் திருத்துதல் | 66,000.00 |
| 27. | | மொனராகலை மாவட்ட அலுவலக சமையலறை மற்றும் சுவர்களைத் திருத்துதல் | 67,750.00 |
| 28. | | மொனராகலை மாவட்ட அலுவலக விறாந்தையின் உட் கூரையைத் திருத்துதல் | 92,200.00 |
| 29. | | மொனராகலை மாவட்ட அலுவலக விறாந்தையில் மழைப் பீலிகளைத் திருத்துதல் | 72,500.00 |
| 30. | | மொனராகலை மாவட்ட அலுவலக குளியலறையைத் திருத்துதல் | 162,385.00 |
| 31. | | மாகாண நில அளவையாளர் அலுவலகத் திருத்தப் பணிகள் | 171,500.00 |
| 32. | நி.அ.நா.அலுவலகம் கொழும்பு | உள்ளகக் கணக்காய்வாளருக்காக அலுவலகம் வேறுபடுத்தல் | 180,600.00 |
| 33. | | பழையகேட்போர் கூடத்தைப் புனரமைக்கப் பொருட்கள் வாங்கல் | 307,640.00 |
| 34. | | தாபனக் கிளையில் பிரிவுகளை வேறாக்கல் | 466,965.00 |
| 35. | | பொருத்தியமைக்கும் கொட்டகைக்கருகில் எல்லை மதில் அமைத்தல் | 1,318,520.00 |
| 36. | | அலுமினியம் யன்னல்களை மீளத் தயாரித்தல் | 123,000.00 |
| 37. | | முன்னேற்றக் கிளையை வேறுபடுத்தல் | 571,359.00 |
| 38. | | தலைமையக் கொன்கிறீட்பெயர்ப் பலகைக்கு நீர் எதிர்ப்புத் தன்மையூட்டல் | 1,971,630.00 |
| 39. | | தீயணைப்புத் தொகுதி பொருத்துதல் | 410,760.00 |

| | | | |
|---|---|---|---|
| 40. | நி.அ.நா.அலுவலகம் கொழும்பு | விளையாட்டறையை வேறுபடுத்துதல் | 205550.00 |
| 41. | | நில அளவையாளர் நாயகத்தின் அறையைப் புனரமைத்தல் | 454,675.00 |
| 42. | | மே.நி.நா(மனிதவளம், நிர்வாகம்) அலுவலக வேறுபடுத்தல்கள் | 135,845.00 |
| 43. | | சிற்றுண்டிச்சாலையைத் திருத்தியமைத்தல் | 1,399,971.33 |
| 44. | | மழைப்பீலிகள் திருத்துதல் | 969,752.00 |
| 45. | | 17 ம் இலக்கக் கழிவறையைத் திருத்துதல் | 239,029.50 |
| 46. | | காணி அளவைச் சபைக்கருகில் கண்காட்சிக் கூடத்தை வேறுபடுத்தல் | 290,292.80 |
| 47. | அ.ப.நி தியத்தலவை | பணிப்பாளர் உத்தயோக பூர்வ இல்லத் திருத்தப் பணிகள் | 304,171.50 |
| 48. | | இல 51 ,9 உத்தியோக இல்லத் திருத்தப் பணிகள் | 123,518.00 |
| 49. | | அளவை உபகரண பழுதுபார்ப்புத்தளத் திருத்தப்பணிகள் | 92,300.00 |
| 50. | | உபகரண சீர்செய்தல் தளத் திருத்தப்பணிகள் | 86,510.00 |
| 51. | | மதில் திருத்தம் | 85,600.00 |
| 52. | | விளையாட்டு மண்டபம் அமைத்தல் | 58,000.00 |
| 53. | | சமூக நிலையம் மற்றும் பட்மின்டன்மைதானத் திருத்தப்பணிகள் | 54,594.00 |
| 54. | | தொலைபேசித் தொகுதிப் பாதுகாப்பு | 90,000.00 |
| 55. | | 20 ஆம் இலக்க கழிவறைத்தொகுதி திருத்தப்பணிகள் | 100,935.00 |





**கம்பஹா மாவட்ட நில அளவை அலுவலக ஆவண அறை**
**நில அளவையாளர் நாயகத்தினால் திறந்துவைக்கப்படல்**

## 5.2. தலைமை அலவலக உபகரணக் கிளையின் சேவைகள்

- அளவை உபகரணத் தொழில் நுட்பவியலாளர்களுக்கும் பூரணமானி மீள்காப்புச் செய்தல் குறித்த பயிற்சி வழங்கியதன் ஊடாக காலாவதியான பூரணமானிகளைத் திணைக்களத்திலேயே மீள்காப்புச் செய்தமையால் இதற்கென கடந்த ஆண்டுகளில் செலவிட்ட 2.9 மில்லியன் ரூபா பணத்தை இந்த ஆண்டில் 1.8 மில்லியன் அளவுக்குக் குறைக்கக் கூடியதாக அமைந்தது குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

- 2013ம் ஆண்டில் லசிகா வகையான பூரணமானிகள்( Total Station ) வாங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டதன் மூலம் புதிய பூரணமானி வகை ஒன்றை பாவனையில் சேர்க்க முடிந்ததோடு திணைக்களத்திலுள்ள பூரணமானிகள் தொகை 317 ஆக அதிகரிக்க இயலுமானது.

- திணைக்களத்திலுள்ளேயே பூரணமானிகளை மீள்காப்புச் செய்துசேமிக்க முடிந்த பணத்தைக் கொண்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் சுமார் 2 லட்சம் ரூபா செலவிட்டு பூரணமானி உட்பொருத்தும் மின்கலங்கள் 03ம் தரவுகள் செலுத்தும் வயர்கள் 05ம் வாங்கிக் களத்தில் விநியோகிக்க முடிந்தது.

- 06 அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர்கள் 04 உபகரணத் தொழிலாளர்கள் 04 தச்சு வேலையாளர்கள் ஆகியோரை ஆட்சேர்ப்புச் செய்ய சகல நடவடிக்கைளும் பூரணமாகியுள்ள தோடு 2014ல் ஆரம்ப மாதங்களில் அதன் மூலம் நெடுங்காலம் நிலவிய ஆளணிப்பற்றாக்குறை நீங்கிவிடும்.

- உரிய காலத்தில் பித்தளை போன்றவற்றை வாங்க முடிந்ததால் நாட்டின் நாலாபுறங்களிலும் நிறுவப்படும் பாலனப்புள்ளிகளுக்குத் தேவைப்படும் பித்தளை ஆணிகளைத் தாமதமின்றித் தயாரித்து வழங்க முடிந்தது.

- மின்கலங்களைப் பயன்படுத்திக் கலத்தில் கையாளப்படும் Boif தியோடலைட்டுக்கள் அனைத்தையும் தலைமையலுவலகத்தில் மீளளிக்க நடவடிக்கை எடுத்து, அவற்றுக்கு பதிலாக மேலதிக செலவல்லாத தியோடலைட்டுக்களைக் கலத்துக்கு விநியோகிக்க ஆவன செய்யப்பட்டது.

- குறித்த காலப்பகுதியில் அலுவலர்களை அறிவூட்டுதல் மூலம் பொருத்தி அமைக்கும் முகாம்கள் குறித்த சரியான தற்போதைய நிலைமையும் பாவனையிலுள்ள அல்லது இல்லாத விபரங்கள் ஒப்பாய்வு மூலம் பெறப்பட்டதால் தேவைகளைக் கருத்தில் கொண்டு பொருத்தி அமைக்கும் முகாம்களை கழற்றுதலும், வழங்குதலும் பற்றி முடிவெடுப்பது இலகுவாக அமைந்தது.

## 5.3 வாகனங்கள் , பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு

நில அளவைத்திணைக்களத்தின் 81 வாகனங்கள் ஒவ்வொன்றும் ரூபா 50,000/= இற்கு மேற்பட்ட செலவில் பின்வருமாறு பழுது பார்க்கப்பட்டது.

| மாகாணம் / பிரிவு | பழுது பார்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | மொத்த செலவு (ரூபா) |
|---|---|---|
| நி.நா.அலுவலகம் | 05 | 1,420,201.00 |
| மேல் மாகாணம் | 09 | 1,774,162.00 |
| மத்திய மாகாணம் | 11 | 1,280,461.00 |
| சப்ரகமுவ மாகாணம் | 06 | 569,350.00 |
| வட மத்திய மாகாணம் | 08 | 926,71938 |
| வட மேல் மாகாணம் | 04 | 610,211.41 |
| ஊவா மாகாணம் | 06 | 637,070.00 |
| தென் மாகாணம் | 12 | 1,208,098.40 |
| வட கிழக்கு மாகாணம் | 09 | 1,264,880.00 |
| அ.ப.நி. (தியத்தலாவை) | 11 | 1512,392.20 |

## 5.4 பெறுகைகள் மற்றும் வழங்கல் கிளை

நில அளவைத் திணைக்களத்தின் 756 களஞ்சியப் பேரேடுகளின் ஒப்பாய்வு வேலை பூர்த்தி செய்யப்பட்டது. தலைமை அலுவலகத்தில் உள்ள பல்வேறு கிளைகள், மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகங்கள், மாவட்ட, பிரதேச நில அளவை அலுவலகங்கள் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள நில அளவையாளர்களினால் பேணப்படும் களஞ்சியப்பொருட்கள் தொடர்பில் இந்த ஒப்பாய்வு நடத்தப்பட்டது.

இதன் பிரகாரம் அரசாங்க நில அளவையாளர்களின் களஞ்சியங்கள், சகல மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகங்களில் உள்ள களஞ்சியங்கள் , 22 மாவட்ட நிலஅளவை அலுவலகங்களில் 21 அலுவலகங்களின் களஞ்சியங்கள், 88 பிரதேச நில அளவை அலுவலகங்களின் களஞ்சியங்கள் , தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்திலுள்ள 4 களஞ்சியப் பிரிவுகளில் 3 பிரிவுகளின் களஞ்சியங்கள் , அனைத்து சுற்றுலா பங்களாக்கள் , விடுமுறை விடுதிகளின் களஞ்சியங்கள் மற்றும் நிலஅளவைளாளர் நாயகம் அலுவலகப் பிரிவுகளின் களஞ்சியங்கள் தொடர்பாக பொறுப்பு விடுவிப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அந்த வகையில் அவற்றின் கோவைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

ஓய்வு பெற்ற 04 உத்தியோகத்தர்கள் மற்றும் பதவியை இராஜினாமா செய்த 06 உத்தியோகத்தர்கள் தொடர்பில் அவர்களுக்கு நிரந்தர பொறுப்பு விடுவிப்பு சான்றிதழ்களும் , அவ்வாறான 30 உத்தியோகத்தர்களுக்கு தற்காலிக பொறுப்பு விடுவிப்பு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

2013 இல், ரூபா. 21.6 மில்லியனுக்கும் கூடுதல் பெறுமதி வாய்ந்த மூலதனப் பொருட்கள், ரூபா. 10.9 மில்லி யனுக்கு மேல் பெறுமதிமிக்க மீள்வரும் பொருட்கள் ஆகியன பெறப்பட்டன. இதுதவிர ‘பிம்சவிய’ திட்டத்தி ற்கு ரூபா.376.6 மில்லியனுக்கும் மேல் பெறுமதியான மூலதனப் பொருட்கள், ரூபா.6.9 மில்லியனுக்கும் மேல் பெறுமதியான மீள்வரும் பொருட்கள் ஆகியனவும் பெறப்பட்டன.

## 6.0 அபிவிருத்திச் செயற்பாடுகள்


இவ்வாண்டுக் காலத்தில் அரசாங்கம் பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்களினை ஆரம்பித்துள்ளதால் அதற்கு ஆதரவாக நில அளவைத் திணைக்களமும் தனது முக்கியமான பங்களிப்பை வழங்கி வந்துள்ளது.

## 6.1 காணி அளவையீடு


2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வகையான அளவைகளின் முன்னேற்றம் வருமாறு


| நில அளவை வகைகள் | பௌதீக முன்னேற்றம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடாந்த இலக்கு | | திரண்ட இலக்கு | | திரண்ட முன்னேற்றம் | | | அடைந்த முன்னேற்றம் % |
| | நி.அ.மா. | துண்டு | நி.அ.மா. | துண்டு | நி.அ.மா. | துண்டு | கோரிக்கை | நி.அ.மா. |
| காணி குறித்தல் அளவைகள் | 1817 | 47236 | 1753 | 35052 | 2154 | 46856 | 4062 | 123 |
| நானாவித அளவைகள் | 797 | 20722 | 1066 | 21248 | 1786 | 60462 | 2882 | 167 |
| காணி சுவீகரிப்பு அளவைகள் | 575 | 17258 | 627 | 15667 | 914 | 24084 | 915 | 146 |
| எந்திரவியல் அளவைகள் | 119 | 2370ha | 139 | 2785ha | 465 | 6486ha | 166 | 334 |
| படமாக்கல் பாலன புள்ளி அளவைகள் | 116 | - | 163 | - | 167 | 45 | 288 | 103 |
| நீதிமன்ற கட்டளை அளவைகள் | 201 | 6030 | 304 | 4564 | 447 | 9266 | 491 | 147 |
| கடத்திரள் அளவைகள் | 2940 | 147000 | 2135 | 64035 | 3108 | 82915 | 1799 | 146 |
| GPS பாலன புள்ளி அளவைகள் | 216 | 6048pt | 217 | 5425pt | 448 | 10920pt | - | 206 |
| மொத்தம் | **6781** | **238364** | **6404** | **140565** | **9490** | **223583** | **10603** | **148** |

மிகவும் அவசரமான ஒரு விடயமாக கருதப்பட்டு பல அளவைகள் மேற்கொள்ளப்பட்டதாலும், நிலஅளவைகளுக்காக புதிய ஊக்குவிப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாலும் செயலாற்றுகை முன்னேற்ற மட்டம் இவ்வாண்டில் குறித்த இலக்கை விட ஆச்சரியமடையக்கூடிய வகையில் 148% வீதமாக அதிகரித்துக் காணப்பட்டது.



2012 மற்றும் 2013 ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட காணி அளவைகளின் முன்னேற்றம் மேலே விகிதாசாரத்தால் காட்டப்பட்டுள்ளதுடன் , 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காணி அளவைகளின் முன்னேற்றம் காணித்துண்டுகளின் எண்ணிக்கையினால் கீழே காட்டப்பட்டுள்ளது.




குறித்த ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் விசேட செயற்பாடுகள் மேற்காட்டிய அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட அளவைச் செயற்பாடுகள் கீழே காணப்படுகின்றன.

- குருநாகல் ஹபரணை புகையிரதப் பாதையில் (31.9 கி.மீ) மையக்கோட்டை கொங்கிறீட் கம்பமிட்டு நிறுவுதல்.
- தேசத்திற்குமகுடம்' திட்டத்திற்கமைய வடமேல் மாகாணத்தில் தொல்லியல் சார் இடங்களை வரைபடமாக்க GPS தரவுகளைப் பெறுதல்.
- வீதிவிஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக தெகியோவிட்ட, தரணியகலை நூரி வீதியில் GPS பாலனப்புள்ளிகள் தாபித்தல்.
- A9 வீதியில் மாத்தளை நகரையும், சூழலையும் விஸ்தரித்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் GPS பாலனப்புள்ளிகள் தாபித்தல்.
- தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பாரிய குருநாகல் நீர்வழங்கல் வடிகாலமைப்புத் திட்டத்திற்காக GPS பாலனப்புள்ளிகளையும், நுட்பமான மட்டமிடல் கோடுகளையும் நிறுவுதல்.
- ரன்திவெல மற்றும் கொஸ்பொதுஓய நீர்த்தேக்க அளவைகளுக்காக GPS பாலனப் புள்ளிகளை தாபித்தல்.
- கிண்ணியா உப்பாறு பிரதேசத்தில் கரையோரப் பாதுகாப்பு முகாமைத் திட்டத்துக்கென GPS பாலனப்புள்ளிகள் நிறுவுதல். (IFAP/ GEF
- இராணுவ வீரர்களுக்குக் காணிகள் விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் தப்போவையில் 155 காணிக்கூறுகளுக்கு நிலக்குழி இடுதலும், ஆனமடுவ, நவகத்தேகம, முந்தலம் ஆகிய இடங்களில் 26.1 ஹெக்டேயரில் BOD தயாரித்தலும்
- பாலாவி- கற்பிட்டி பாதையில் காணி சுவீகரிப்பு அளவைகள் 142 துண்டுகள் (பிரிவு5)
- பாலாவி- கற்பிட்டி பாதையில் நுட்ப அளவைகள் 150 துண்டுகள்
- புத்தளம்- திருகோணமலைப்பாதையில் காணி சுவீகரிப்பு அளவைகள் 118 துண்டுகள் (பிரிவு5)
- வீடமைப்பு அதிகாரசபைக்காக பண்டாரஹேன, சமீரகமை 310 காணித்துண்டுகளில் நிலக்குறி இடுதல்.
- வடக்கு அதிவேகப் பாதையில் பிரதேசவியல் அளவைகள்
- தெதுறு ஓயாவில் 192 காணித்துண்டுக் கூறுகள் பகிர்தல்
- அனுராதபுர பாதெனிய வீதியில் சுவீகரிப்பு அளவைகள் 1093 துண்டுகள்
- இங்கினிமிட்டிய திட்டத்திற்கு சுவீகரிப்பு அளவைகள் - 544 துண்டுகள்
- குருநாகல் - மாதம்பை வீதி (பிரிவு 2) கி.மீ 5 -கி.மீ 474
- குருநாகல் சுற்றுவட்டப் பாதை - 200 துண்டுகள்
- மாகோ மேம்பாலச் சுவீகரிப்பு அளவைகள் - (2ம் பிரிவு) - 170 துண்டுகள்
- பன்னல சுற்றுவட்டப் பாதை - 229 துண்டுகள்
- நாரம்மல நகர அபிவிருத்தி அளவைகள் (5ம் பிரிவு) - 384 துண்டுகள்
- அம்பாறை அரந்தலாவை வீட்டுத்தொகுதிக்கான நுட்பமான அளவைப்பணிகள் - 554 துண்டுகள்

- அம்பாறை பதியத்தலாவை இறப்பர் திட்டத்துக்கான சுவீகரிப்பு அளவைப் பணிகள் - 4.4382 ஹெக்ரெயர்
- லாஹுகல இறப்பர் திட்டத்துக்கான 295.5173ஹெக்ரெயர் / 313 BOD அளவை - அம்பாறை
- பேராதனை - பதுளை - செங்கலடி வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சுவீகரிப்பு அளவைகள்
- உமா ஓய பன்முக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் காணிச் சுவீகரிப்பு அளவைகள் - மொனராகலை
- சுகலாதெவி திட்டத்தின் கீழ் 200 துண்டுகளில் 180 ஹெக்ரெயர் முளைகள் நிறுவல்
- மாத்தறை கதிர்காமம் புகையிரதப் பாதைக்கான காணிச் சுவீகரித்தல் சார் அளவைப் பணிகள்
- மாத்தறை - ஹம்பாந்தோட்டை தெற்கு அதிவேகப் பாதையின் மாத்தறை கொடகமையில் இருந்து பெலியத்தை வரையான பகுதியில் பூர்வாங்க அளவைப் பணிகள் (32 கி.மீ - 964 ஹெ.)
- பெரலிய வனாந்தர எல்லை நிர்ணயிப்பு சார் அளவைப் பணிகள் (33.6 கி.மீ)
- பனிச்சங்கேணி கடலேரி மற்றும் அதுசார் கண்டல் தாவரப் பகுதியைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாய் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட 4222 ஹெக்ரெயரில் நிலக்குறிகளிட்டுக் கிடைப்படம் தயாரித்தல்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாக விவசாய பீடத்துக்கான உத்தேசக் காணியில் எந்திரவியல் அளவைப் பணிகள் 161.88 ஹெக்.- மட்டக்களப்பு
- இலங்கை முதலீட்டுச் சபை ஆளுகைப் பிரதேசத்தில் வர்த்தமானியில் பிரகடனப்படுத்திய காணியின் பௌதிக சுற்றெல்லைகளைக் குறித்தலும், வரைபடம் தயாரித்தலும். 846.66 ஹெக். - ஹம்பாந்தோட்டை
- முறுதவெல நீர்த்தேக்கம், கிரிந்தி ஓய, திசா வாவி, தெபர வாவி அணைப்பகுதி, யோதவாவி பாதுகாப்புப் பிரதேசத்தை நிறுவி அத்துமீறல் காணிகளை அளந்து சுவடு வரைதல் தயாரித்தல் - ஹம்பாந்தோட்டை
- கிரிஸ்ரீயாச் செய்கைக்காக மேலதிகப் புல்வெளிகளில் 4156.31 ஹெக். அளத்தல் - ஹம்பாந்தோட்டை
- கேகாலை இராணுவ முகாமுக்கான எல்லைகளை நிர்ணயித்தல்.
- கொழும்பு - கண்டி வீதியில் (3ம் கட்டம்) சுவீகரிப்பு அளவைகள் - கேகாலை
- தெகிஓவிட்ட, தரணியகலை நூரி வீதிச் சுவீகரிப்பு - கேகாலை
- அனுராதபுர மாவட்டத்தில் கரும்புச்செய்கையை விஸ்தரிப்பதற்கான அளவைப் பணிகள் - யதார்த்த வடிவ அளவைகள்
- வடக்கில் உல்லாசப் பயணத்துறையை விருத்தி செய்வதற்கான அளவைப் பணிகள் - யதார்த்த வடிவ அளவைகள்
- கண்டி மாவட்ட திகண உள்ளக விமான நிலையத்தை நிறுவுவதற்கான அளவைப் பணிகள் - சுவீகரிப்பு அளவை
- கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கான காணி அளவைகள் - வவுனியா, மன்னார், திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு - நிலக்குறியீடும் அளவைகள், சுவீகரிப்பு அளவைகள்
- தெற்கு அதிவேகப் பாதையில் பிரதேசவியல் அளவைப் பணிகள்

6.1.1 காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அளவைகள் . அளிப்பு பத்திரம் பெறுவதற்காக வழங்கப்பட்ட வரிப்படங்கள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| மாவட்டம் | வழங்கப்பட்ட வரிப்படங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | **2012** | 2013 |
| கண்டி | 462 | 693 |
| மாத்தளை | 757 | 684 |
| நுவரெலியா | 398 | 668 |
| அனுராதபுரம் | 1892 | 1787 |
| பொலநறுவை | 6674 | 1159 |
| வவுனியா | 434 # | 1497 |
| கிளிநொச்சி | - | 100 |
| யாழ்ப்பாணம் | 655 | 277 |
| மட்டக்களப்பு | 510 | 1818 |
| திருகோணமலை | 1763 | 1342 |
| குருநாகல் | 594 | 953 |
| புத்தளம் | 860 | 3003 |
| இரத்தினபுரி | 724 | 269 |
| கேகாலை | 132 | 251 |
| காலி | 477 | 940 |
| மாத்தறை | 552 | 471 |
| அம்பாந்தோட்டை | 1710 | 899 |
| பதுளை | 373 | 582 |
| மொனராகலை | 759 | 1022 |
| அம்பாறை | 1416 | 1815 |
| கொழும்பு | 38 | 74 |
| கம்பஹா | 78 | 147 |
| களுத்துறை | 288 | 349 |
| மொத்தம் | 21546 | **20800** |

# மன்னார் மாவட்டம் உள்ளடங்கலாக

## 6.2 புவிப்பாத்த நில அளவைக் கிளையின் செயற்பாடுகள்

தியத்தலாவை அளவைப் படமாக்கல் நிறுவனத்திலும், அதனோடு இணைந்ததாக மேல்மாகாண, வட மேல் மாகாண மற்றும் தென் மாகாண பிரதி நில அளவையாளர் நாயக அலுவலகங்களில் உருவாக்கப்பட்டுள்ள புவிப்பாத்த நிலஅளவைப் பிரிவினால் 2013 ஆம் ஆண்டில் பாலனப் புள்ளிகள் உருவாக்கத்திலும் , ஏனைய அளவைகளிலும் அடையப்பட்ட முன்னேற்றம் பந்தி 6.1 இல் காட்டப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் பந்தி 8.2 இல் காட்டப்பட்டுள்ளது.

## 6.3 படமாக்கல்

- நாட்டுக்குத் தேவையான முறையில் பிரதேசவியல் மற்றும் பல்வேறு தலைப்புக்களில் படங்களைத் தயாரித்தல் நிலஅளவைத் திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாகும். மேலும் ஏதேனும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக வேண்டிய தரவுகளை வழங்கும் வரைபடங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில் வழங்குகின்றது. மற்றும் வான் முறை ஒளிப்படங்கள், எண் முறையிலான (digital) வரைபடங்கள் ஆகியவற்றையும் இறுவெட்டுக்களில் (CD) பெறமுடியும்.

  இவை அனைத்தையும் நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பெறலாம்.

- வான்முறை ஒளிப்படங்கள் மற்றும் எண்முறை வரைபட இறுவட்டுக்கள் தவிர்ந்த ஏனைய வரைபடங்கள் யாவற்றையும் தியத்தலாவையில் அமைந்துள்ள அளவைப் படமாக்கல் நிறுவனத்திலும் சகல மாவட்ட நில அளவை அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

- இந்த ஆண்டில் எண்தரவுப் படங்கள் உட்பட படங்களின் விற்பனை மூலம் கீழ்க்காணும் தொகை வருமானமாகப் பெறப்பட்டது.

| அலுவலகம் ; வேலைத்திட்டம் | வருமானம் (ரூபா) |
|---|---|
| நில அளவையாளர் நாயகம் அலுவலக மூலம் | 9016,688.00 |
| நடமாடும் படவிற்பனை வாகன மூலமான படவிற்பனை | 418,395.50 |
| அளவைப்படமாக்கல் நிறுவனம் மற்றும் சகல மாவட்ட நில அளவை அலுவலகங்களிலிருந்து | 137.385.00 |
| மொத்த வருமானம் | **9,572,468.50** |

- அதேபோல் கீழக்காணும் பெறுமதி கொண்ட வரைபடங்கள் இலவசமாக நிறுவனங்களுக்கும், நபர்களுக்கும் தயாரித்து வழங்கப்பட்டன.


| | வரைபடங்களின் பெறுமதி(ரூபா) |
|---|---|
| படமாக்கல் கிளையினால் நிறுவனங்கள் நபர்களுக்காக இலவசமாகச் செய்த வரைபடங்களுக்கான தொகை | 190,457.00 |
| பட விற்பனைப் பிரிவினால் இலவசமாய் வழங்கப்பட்டுள்ள வரைபடங்களுக்கான முழுத்தொகை | 137,900.00 |
| நினைவுப் பரிசுகளாக வழங்கப்பட்ட வரைபடங்களின் பெறுமதி | 170,576.00 |
| இலவசமாய் வழங்கப்பட்ட வரைபடங்களுக்கான முழுத்தொகை | 498,933.00 |

| | |
|---|---|
| இதன்படி 2013 ஆம் ஆண்டில் படத் தயாரிப்பின் முழுப்பெறுமதி | **10,071 ,401.50** |

04.தேசத்திற்கு மகுடம் வேலைத்திட்டத்துடன் சமாந்தரமாக நடத்தப்பட்ட வேலைத்திட்டமாக புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு நடமாடும் பட விற்பனை வாகனத்தைப் பயன்படுத்தி சலுகை விலைகளில் வரைபடங்கள் விற்கப்பட்டன. அதன் முலம் கஷ்டப் பிரதேசப் பாடசாலை மாணவர்களும சலுகை விலைகளில் வரை படங்கள் வாங்க வாய்ப்புக்கிட்டியது.

**6.3.1** 2012 – 2013 ஆண்டு காலப்பகுதியில் படத்தயாரிப்பில் அடைந்த முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வகைகள் | அலகு | பௌதீக முன்னேற்றம் (தொழில்நுட்பவியலாளர்கள் மாதங்கள்) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2012 | | | 2913 | | |
| | | வருடாந்த இலக்கு | அடைந்த முன்னேற்றம் | இலக்கில் அடைந்த முன்னேற்றம் (மு) | வருடாந்த இலக்கு | அடைந்த முன்னேற் றம் | இலக்கில் அ டைந்த முன்னேற்றம (%) |
| பிரதேசவியல் படமாக்கல் | தொழில்நுட்பவிய லாளா் மாதங் கள் | 204 | 183.3 | 90.0 | 197 | 184.2 | 93.50 |
| சுவாத்திய படமாக்கல் | தொழில்நுட்பவிய லாளா் மாதங்கள் | 216 | 225.66 | 104.0 | 195 | 230.64 | 104.0 |
| மீள் ஆக்கம் | இயந்திர மணித்தியாலங்கள் | 2700 | 2772 | 103.0 | 3000 | 1875 | 103.0 |



**6.3.2 மேற் குறித்த அட்டவணையில் குறித்த ஆண்டில் முழுமைப்படுத்திய கீழ்காணும் வரைபட முன்னேற்றமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

| வகைகள் | அலகு | பௌதீக முன்னேற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2012 | | | 2013 | | |
| | | வருடாந்த இலக்கு | அடைந்த முன்னேற்றம் | இலக்கில் அடைந்த முன்னேற்றம் (மு) | வருடாந்த இலக்கு | அடைந்த முன்னேற்றம் | இலக்கில் அ டைந்த முன்னேற்றம (%) |
| பிரதேசவியல் படமாக்கல் | வரைபடத் தொகை | 110 | 86 | 78 | 251 | 218 | 86.85 |
| சுவாத்திய படமாக்கல் | வரைபடத் தொகை | 144 | 208 | 144 | 178 | 227 | 127.52 |

- 1:10,000 அளவிடையிலான பிரதேசவியல் வரைபடத்தாள்கள் 80 தொடர்பில் களஆய்வு செய்யப்பட்டு வேலை பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.
- 1:50000 அளவிடையிலான பிரதேசவியல் வரைபடத்தாள்கள் 2ஐ 2007ம் ஆண்டில் பெறப்பட்ட செய்மதிப்படங்கள் மூலம் நாளது வரைப்படுத்தும் இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன.
- 1:250000 அளவிடையிலான (4 பாகப்படம்) இலங்கை தேசப்படம் (ஆங்கிலம்)எண்முறைமையான தரவுகளுக்கமையப் பூரணமாக்கப்பட்டதுடன் லித்தோ முறையில் அச்சிடப்பட்டுள்ளது.சிங்களப் பதிப்பின் இறுதிக்கட்ட வேலைகள் நடைபெறுகின்றன.
- எண்முறைமையிலான தரவுகளைப் பாவித்துத் தயாரிக்கப்பட்ட 12 மாவட்ட வரைபடங்கள் 2013 ம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ள மாவட்ட வரைபடங்களின் எண்ணிக்கை 24 ஆகும்.
- வீதிகள் மற்றும் நகர வரைபடப் புத்தகத்தின் பணிகள் இவ்வாண்டு முடிவடைந்தன.
- கொழும்பு மற்றும் புறநகர வரைபட வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- குமண பயண வரைபடமும் இலங்கையின் சிறிய அளவு உல்லாசப் பயண வரைபடமும் பரணமாக்கப்பட்டு லித்தோ முறையில் அச்சிடப்பட்டன.
- அதேபோல் இவ்வாண்டு மேற்கு மற்றும் கிழக்கு மாகாண வரைபடங்களின் பணிகளும் பூர்த்தியாயின.
- இலங்கைத் தேசப்படத் தொகுதிகள்() சிங்கள, தமிழ் பதிப்புகளின் முதல் தொகுதி அச்சிடப்பட்டுள்ளதோடு இரண்டாம் தொகுதித் தயாரிப்புப் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன.
- அரசாங்க அமைச்சுக்கள் திணைக்களங்கள் ஏனைய நிறுவனங்கள் தனிநபர்களது வேண்டுகோளுக்கமைய 2013 ஆம் ஆண்டில் இலவசமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளவரைபடங்களின் எண்ணிக்கை 1151 ஆகும். அவற்றின் பெறுமதி ருபா1740033.00 ஆகும்.
- இவற்றுக்கு மேலதிகமாக நுகர்வோரது விண்ணப்பங்களுக்கமையத் தயாரிக்கப்பட்ட வரைபட விற்பனை மூலம் கணிசமான வருமானத்தைத் திணைக்களம் பெறுவதுடன் 2013 ஆம் ஆண்டின் வரைபடங்களின் தொகை 164 ஆகும்.
- பாதுகாப்புத் துறை அலுவலர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ரைபடம் தயாரித்தல்.தொடர்பிலான அறிவூட்டுதல் நிகழ்வுகள் இவ்வாண்டும் நடைபெற்றதோடு 7 குழுவினர் அதில் தெரிவு பெற்றனர்.
- விதவிதக் கண்காட்சி வேளைகளில் நடமாடும் பட விற்பனை வாகனத்திற்கு பாரியளவில் கோரிக்கை நிலவுவதோடு இவ்வாண்டு தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு மேலதிகமாக அத்தகைய 4 கண்காட்சிகளின் போது நடமாடும் பட விற்பனை வாகனம் ஈடுபடுத்தப்பட்டது.



இலங்கைத்தேசப் படத்தொகுதியின் 2ஆம் பதிப்பின் சிங்கள,தமிழ்மொழி பெயர்ப்பின் முதற்தொகுதி காணி காணி அபிவிருத்தி அமைச்சில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு வழங்கப்படுதல்



காணி,காணி அபிவிருத்தி அமைச்சு வளாகத்தில் வரைபட விற்பனை நிலையமொன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் திறந்து வைக்கப்படுதல்

## 6.4 புவியியல் பெயர்கள் கிளை

- தேசப்படங்கள் மற்றும் ஆவணங்களிலும், புவியியல் தகவல் தரவுத் தளங்களிலும் பாவிக்கப்படும் புவியியல் பெயர்களைச் சீராகத் தரப்படுத்தும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தில் அண்மையில் நிறுவப்பட்ட கிளை இதுவாகும்.
- நாளது வரைப்படுத்தப்பட்ட மிகச்சரியான தேசப்படங்களுடன் சரியான பெயர்களைப் புவித்தகவல் பாவனையாளர்களுக்கு வழங்கிய வண்ணம் புவித்தகவல் சமூகத்தின் தேவைகளை ஈடேற்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட புவியியல் நாமங்களைச் சீராகத் தரப்படுத்துவதின் தேவைப்பாடு வெகுகாலமாக உணரப்பட்டே இருந்தது.
- புவியியல் பெயர்களை அங்கீகரிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்குவதானது அரச வளங்களை முழுமையாகப் பேணக்கூடியதாக அமைவதனால் நெடுங்காலமாக நிலவிவந்த இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இப்புதிய கிளை ஸ்தாபிக்கப்பட்டது.
- இலங்கையில் புவியியல் பெயர்களை அங்கீகரிப்பதற்கான கமிட்டி ஒன்றை நிறுவ அமைச்சரவை 2009.09.08 திகதியன்று முறைப்படி அனுமதி வழங்கியுள்ளது.
- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், புவியியல் பெயர்களை அங்கீகரிப்பதற்காகப் புதிய பிரதி நில அளவையாளர் நாயகம் பதவியொன்றை ஏற்படுத்த 2011.01.01 முதல் அனுமதியளித்திருந்தபோதும் நிர்வாகக் காரணங்களால் இக்கிளை உத்தியோக பூர்வமாக 2012.02.16 திகதியன்றே ஸ்தாபிக்கப்பட்டது.
- கிளையின் ஆரம்பம் 2012 பெப்ரவரி மாதத்தில் நிகழ்ந்ததால் புவியியல் நாம அங்கீகரிப்புக் கமிட்டியை நில அளவையாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் உள்நாட்டலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தொல்பொருளியல் மற்றும் தேசிய மொழிகள் திணைக்களம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிஞர்கள், நிலஅளவைத் திணைக்கள சிரேஷ்ட்ட செயலணி உறுப்பினர்கள் அடங்கலாகப் 10பேர் கொண்ட கமிட்டியாக அமைப்பதற்கான அங்கீகாரம் கோரி அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டது. கமிட்டியின் செயற்பாடுகள் வருமாறு;-
    - தேசியத் தர அங்கீகரிப்பினை வழி நடத்துவதற்குப் பாவிக்கத் தகுந்த அடிப்படைச் சித்தாந்தங்கள் அடங்கிய அடிப்படைக் கொள்கைகளைத் தாபித்தல்.
    - பிரச்சினைகளையும், தர அங்கீகாரத்தைச் செயற்படுத்தும் முறையையும் குறித்த விசேட விபரங்கள் திட்டமிடப்படுதலை உள்ளடக்கும் கொள்கைகளையோ நியமங்களையோ தாபித்தல்.
    - பெயர்களின் சீரான தர அங்கீகரிப்பினைச் செயற்படுத்துவதற்கான வழிமுறைகளையும் செயல்முறைகளையும் தாபித்தல்.

- ❖ தேசிய திட்டமிடல் திணைக்கள மூலம் நிதி ஒதுக்கீட்டினைப் பெறும் உத்தேசத்துடன் இலங்கையில் புவியியல் நாம அங்கீகரிப்புக்கான கருத்திட்டப் பத்திரமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

- ❖ புவியியல் பெயர்களில் பெருமளவு சிங்களமொழியில் பிறந்துள்ள போதும் அனேக வரைபடங்களிலும், உத்தியோகபூர்வ ஆவணங்களிலும், இலக்கமுறைத் தரவுத்தளங்களிலும் அவை ரோம அட்சரங்களாலேயே எழுதப்பட்டுள்ளதால் சிங்களமொழிக்காக ரோம எழுத்தாக்க முறைமை ( Romanization system ) ஒன்றைத் தாபிக்குமாறு அரச கரும மொழிகள் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

- ❖ (UNGEGN) ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவிற்கும், அரையாண்டு UNGEGN சஞ்சிகைக்கும் தேசியரீதியில் அறிக்கைகள் சமர்ப்பித்தலும் இக்கிளையின் மற்றுமொரு பொறுப்பாகும். 2013 மே மாதம் வெளியிடப்பட்ட 44 ஆம் இலக்க UNGEGN சஞ்சிகையில் தேசிய அறிக்கையொன்று பிரசுரமானது.

- ❖ அங்குல அளவிடையிலான பிரதேசவியல் வரைபடத் தொகுதியை அடிப்படையாக கொண்டு 29600 இடங்களுடன் நாட்டின் சிறப்பம்சங்களை உள்ளடக்கி 1960 யூன் மாதம் வொஷிங்டன் உள்நாட்டலுவல்கள் திணைக்களத்தின் புவியியல் அலுவலகம் தயாரித்த பூகோளத் தகவல் பெயரட்டவணை இலக்க முறைமையில் மொழி பெயர்க்கப்பட்டது.

- ❖ 331 பிரதேச செயலகங்களின் பெயர்கள் மும்மொழிகளிலும் இலக்க முறைமையில் தயாரிக்கப்பட்டது. 2012 குடிசன தொகைமதிப்பு புள்ளிவிபர அறிக்கை அடிப்படையில் 14022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்குவதற்கான எண்முறை பூகோளத்தகவல் பெயரட்டவணையொன்று தயாரிக்கப்பட்டது. எனினும் கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் “ருவன்புர” எனும் கிராம உத்தியோகத்தர் பிரிவு இரு இடங்களில் அமைந்திருப்பதால் இவ் அட்டவணையில் கிராம உத்தியோகத்தர்களது பெயர்கள் 14025 அடங்கியிருந்தன. மாத்தறை மாவட்டத்தில் மலிம்பட பிரதேச செயலாளர் பிரிவில் “பஹல கியாண்டு” என்ற கிராம உத்தியோகத்தர் பிரிவும் இரண்டு இடங்களில காணப்படுகிறது.

- ❖ தற்போது இக் கிளையில் நடைபெறும் நிரந்தர அலுவல்களாகப் புதிதாக தயாரிக்கப்பட்ட வரைபடங்களிலும், தரவுத் தொகுதிகளிலும் புவியியல் பெயர்களை பரீட்சித்தல், UNGEGN ற்கான அறிக்கைகள் தயாரித்தல், பல்வேறு வரைபட அளவிடைகளுக்காகவும் பூகோளத் தகவல் பெயரட்டவணைகளை மும்மொழிகளிலும் தயாரித்தல் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

- ❖ இக் கிளை தற்போது தற்காலிகமாக சிரேஸ்ட பிரதி நிலஅளவையாளர் நாயகம் (படமாக்கல்) அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

## 6.5 ஆவண முகாமைத்துவமும், தொழில்சார் நியமங்கள் கிளையும்:

இக்கிளையினால் பெருமளவிலான பழைய கிடைப்படங்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதுடன், அப்படங்களின் பிரித்தெடுத்த பகுதிகள் பொதுமக்களின் வேண்டுகோளின் பேரில் வழங்கப்படுகிறது. மேலும் காணி நிர்ணயச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்பு, இறுதி கிராமப் படங்களின் தயாரிப்பு வேலைகள் இக்கிளையினாலேயே மேற்கொள்ளப்படுகிறது. 2013 ஆம் ஆண்டில் இக்கிளையினால் அடையப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு.

### 6.5.1. காணி உரித்து வரைபடங்கள் மற்றும் ஏனைய வரைபடங்களின் பிரதிகள் வழங்கல்

வழங்கப்பட்ட காணி உரித்து , ஏனைய வரைபடங்களின் பிரதிகளின் எண்ணிக்கை - 2228
இப்பிரதிகளை வழங்கியதன் மூலம் ரூபா. 1,174,692.00 வருமானமாகத் திரட்டப்பட்டுள்ளது.

### 6.5.2 மாவட்ட நிலஅளவை அலுவலகங்களினால் வழங்கப்பட்ட சுவடுவரைதல்களும், வரிப்படங்களும்.

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட நிருணய வரிப்படங்களின் எண்ணிக்கை | - | 1094 |
| மானியங்கள் வழங்குவதற்காக வழங்கப்பட்ட வரிப்படங்களின் எண்ணிக்கை | - | 1618 |
| குத்தகை வரிப்படங்கள் | - | 612 |
| பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட சுவட்டு வரைபடங்கள் | - | 7947 |
| பொது மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிப்படுத்திய ஆவணப் பிரதிகளின் எண்ணிக்கை | - | 8926 |

கா.அ.ச. கீழ் வழங்கப்பட்டுள்ள வரிப்பட எண்ணிக்கை (தயவு செய்து 6.1.1 ஐப் பார்க்கவும்) பிரதிகள் வழங்கியதன் மூலம் ரூ. 13,191,394.39 வருமானம் பெறப்பட்டுள்ளது.

### 6.5.3. நீதிமன்ற கட்டளை அளவைகள்

| | | |
|---|---|---|
| கடந்த ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மீதி | - | 407 |
| நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை | - | 542 |
| பூர்த்தி செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டவை | - | 498 |
| வருட முடிவில் மீதி | - | 451 |

### 6.5.4 காணி நிருணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இறுதி கிராம வரைபடம் மற்றும் இறுதி பிரதேசவியல் வரைபடத் தயாரிப்பு:

| | |
|---|---|
| கடந்த ஆண்டு முடிவில் மீதி | 67 |
| 2013 ஆம் ஆண்டில் கிடைத்த அளவு | 28 |
| 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அடையப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு<br>தயாரித்து வழங்கிய இறுதி கிராமப் படங்களின் எண்ணிக்கை | 60 |
| 2013 ஆம் ஆண்டு முடிவில் மீதி | 35 |

### 6.5.5 புதிதாக தயாரிக்கப்பட்ட படங்களுக்கமைய பழைய பதிவேடுகளை நாளதுவரைப்படுத்தல்.

| | | |
|---|---|---|
| கடந்த ஆண்டு முடிவில் நாளது வரைபடுத்த எஞ்சியிருந்த கிடைப்படங்களின் எண்ணிக்கை | - | 3195 |
| 2013 ஆம் ஆண்டில் கிடைத்த தொகை | - | 8523 |
| நாளது வரைப்படுத்தப்பட்ட பழைய பூர்வாங்கப்படங்களின் எண்ணிக்கை | - | 1923 |
| நாளது வரைவுபடுத்தப்பட்ட பழைய இறுதி கிராமப் படங்கள், இறுதி பிரதேசவியல் படங்களின் எண்ணிக்கை | - | 2952 |
| பிரதேசவியல் பூர்வாங்கப் படங்கள், கிராமப் படங்களின் எண்ணிக்கை | - | 594 |
| கடத்திரள் படங்களின் எண்ணிக்கை | - | 4014 |
| வருட முடிவில் எஞ்சிய கிடைப் பட எண்ணிக்கை | - | 2235 |

### 6.5.6. பழைய படங்களைப் பாதுகாத்தல்.

பழைய படங்களை பாதுகாக்கும் முகமாக, 2004 ஆம் ஆண்டில் எண்தரவு முறையில் அவற்றை சீராக்கம் செய்து களஞ்சியப்படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைய முன்னேற்றம் வருமாறு

| வகை | பூர்த்தி செய்யப்படவுள்ள கிடைப்பட களத்தாள் எண்ணிக்கை | வரை பூர்த்தி செய்ததொகை | ஆண்டில் பூர்த்திசெய்த தொகை | மீதி |
|---|---|---|---|---|
| உரித்துக் கிடைப்படங்கள் | 461,558 | 113,119 | 13,853 | 334,586 |
| களத் தாள்கள் | 71,425 | 25,937 | 13,644 | 31,844 |
| ஆரம்பக் கிடைப்படங்கள் | 100,626 | - | - | 100,626 |

### 6.5.7 நிலஅளவைகளுக்கு வேண்டிய தகவல்கள் வழங்கல் (எல் 96)

நிலஅளவைக்கு வேண்டிய எல் 96 தகவல்கள் 7163 காணித்துண்டுகள் தொடர்பில் வழங்கப்பட்டது.

### 6.5.8 அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ சான்றிதழ் வழங்குதல்.

கடத்திரள் அளவைகளை மேற்கொள்ள விரும்பும் பதிவு செய்துகொண்ட நிலஅளவையாளர்களுக்கு 1998 ஆம் ஆண்டின் உரித்துப் பதிவு கட்டளை சட்டத்தின் கீழ் கடத்திரள் அளவைகளை மேற்கொள்வதற்கான நிலஅளவையாளரின் திறமை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ சான்றிதழ் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 2013.12.31ல் பதிவுபெற்ற நில அளவையாளர் தொகை | - | 1975 |
| 2012.12.31 திகதியன்று உத்தியோக சான்றிதழ் பெற்றோர் தொகை | - | 1262 |
| 2013 ல்பெற்றுக்கொண்டோர் தொகை | - | 35 |
| 2013.12.31 ல் உத்தியோக பூர்வ சான்றிதழ்பெற்ற முழுத் தொகை | - | 1297 |

## 7.0 காணித்தகவல் /பூகோளத் தகவல் கிளை

## 7.1 வான்முறை அளவீடு

**ஒளிப்பட ஆய்வுகூடம் , ஒளிப்பட அளவை கிளை**

வான்முறை அளவைகளும், அதனுடன் தொடர்புடைய முன்னேற்றங்களும் வருமாறு.

| வகை | அலகு | முன்னேற்றம் |
|---|---|---|
| ஒளிப்பட தொடுகை அச்சிடுகை | அலகுகள் | 3246 |
| நேரான ஒளிப்படங்கள் | அலகுகள் | 17 |
| வான்முறை ஒளிப்படங்கள் சீராக்கம் (100 µ)<br>(பழைய படங்களை பாதுகாப்பதற்காக) | அலகுகள் | 40 |
| வான்முறை ஒளிப்படங்கள் சீராக்கம் (40,25 µ)<br>(கறுப்பு ,வெள்ளை) | அலகுகள் | 7489 |
| வான்முறை ஒளிப்படங்கள் சீராக்கம் (7.5 µ)<br>(வர்ணம்) | அலகுகள் | 1374 |
| வான்முறை ஒளிப்படங்கள் சீராக்கம் (7.5 µ,20 µ) | அலகுகள் | 41 |
| ஒளிப்பட அளவை குறித்தல் (1:1,000) | தாள்கள் | 3150.39 |
| ஒளிப்பட அளவை குறித்தல் (1:10,000) | தாள்கள் | 102.5 |

## 7.2 தொலையுணர்வுக் கிளை

92 படத்தாள்கள் கொண்ட 1:50,000 எனும் அளவிடையிலான பிரதேசவியல் வரைபடக கோவை தொடர்பில் தயாரிக்கப்பட்டு வரும் புதிய வரைபடத்தொடரின் எண்முறைத் தரவுத் தொகுதியின் முன்னேற்றம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| 1 வது மட்டம் | 2 வது மட்டம் | 3 வது மட்டம் |
|---|---|---|
| அதிபகுப்பாய்வுச்செய்மதிப் படங்களைப் பாவிக்காது களப் பரிசோதனையின்றி எண்முறைத் தரவுகளைத் தளத்தில் உட்புகுத்தல். ஆரம்பத்தில் இம் முறை செயற்படுத்தப்பட்தோடு 33 தாள்களின் பணிகளை முடித்த பின் எதிர் காலத்தில் இது 2ஆம்,3ஆம் மட்டங்களின் கீழ் மட்டும் செயற்படுத்தப்படும். | அதிபகுப்பாய்வுச்செய்மதிப் படங்களைப் பாவிக்காது களப் பரிசோதனையின்றி எண்முறைத் தரவுகளைத் தளத்தில் உட்புகுத்தல். 2013 ஆம் ஆண்டில் 10 தாள்களின் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன. அதற்கமைய பூர்த்தியான முழுத் தாள்களின் தொகை 37 ஆகும். இதற்கு மேலதிகமாகப் புதிய பிரதேசவியல் வரைபடத் தொகுதியில் 15 தாள்களில் உள்ள வாவிகள் ,ஆறுகள், கால்வாய்கள்,அருவிகள் மற்றும் நீர் நிலைகள் தற்போது பாவிக்கப்படும் 1;50000 அளவிடையிலான பிரதேசவியல் வரைபடங்கள்தொடர்பான எண்முறைத்தரவுகளுடன் ஒப்புநோக்கி உரிய திருத்தங்கள்செய்யப்பட்டன. | அதிபகுப்பாய்வுச்செய்மதிப் படங்களைப் பாவித்துக் களப் பரிசோதனையின் பின்னர் எண்முறைத் தரவுகளைத் தரவுத் தளத்திற்கு உட்புகுத்தல். 2013 ம் ஆண்டில் 06 தாள்களின் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன. அதற்கமைய பூர்த்தி செய்யப்பட்டுள்ள முழுத் தாள்களின் தொகை 22 ஆகும். |

இதற்கு மேலதிகமாக அதிபகுப்பாய்வுச் செய்மதிப் படங்களை பாவித்து 2012ல் தயாரிக்கப்பட்ட இலங்கை வீதித் தொகுதிக்குரிய 1,50000 அளவிடையில் நவீன பிரதேசவியல் எண்முறைத் தரவுகளை வீதி அதிகார அபிவிருத்தி அதிகார சபையின் A மற்றும் B பாதை அளவுகளுக்கமைய ஒப்பாய்வு செய்து உரிய திருத்தங்கள் செய்யப்பட்டுத் தொகுதியில் உட்புகுத்தப்பட்டது.

## 7.3 காணித்தகவல் முறைமை

இப் பிரிவின் பிரதான பணி களத்தில் தயாரிக்கப்படும் கிடைப்படங்களின் எண்முறையிலான தரவுகளை காணித் தகவல் முறைமைக்குள் உள்ளடக்குவதாகும்.

முன்னேற்றம்

| | தரவு முறைமைக்குள் மாற்றம் செய்யப்பட்டட கடத்திரள் பட வலயங்களின் எண்ணிக்கை | தரவு முறைமைக்குள் மாற்றம் செய்யப்பட்டட காணித் துண்டு களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2013 இல் முன்னேற்றம் | 716 | 145,243 |
| 2013 இன் முடிவில் மொத்த முன்னேற்றம் | 3,456 | 679,095 |

இதற்கு மேலதிகமாக பலாங்கொடை,மெதிரிகிரிய,மீரிகமை,சியம்பலாண்டுவ,திஸ்ஸமகாராம ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளில் தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ள சகல வலயங்களையும் ஒன்றிணைத்து அப் பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளடங்கும் வண்ணம் ஒரே காணித்துண்டு வலைப் பின்னல் (seamless dataset ) ஆக அமையும்விதத்தில் தரவுத்தளம் நாளது வரைவு படுத்தப்பட்டது.

மொரட்டுவை, இரத்மலானை,ஹோமாகம ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளில் பூரணப்படுத்தப்பட்டுள்ள சகல வலயங்களையும் ஒன்றிணைத்து அப் பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளடங்கும் வண்ணம் ஒரே

காணித்துண்டு வலைப் பின்னல் (seamless dataset ) ஆக அமையும்விதத்தில் தரவுத்தளம் நாளது வரைவு படுத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டது.

## 7.4 பூகோளத் தகவல் முறைமை

பூகோளத் தகவல் முறைமைக் கிளையினால் 2013 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட பணிகளும் பெற்ற முன்னேற்றமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்பாடு | அலகு | 2012 | | |
|---|---|---|---|---|
| | | வருடாந்த இலக்கு | அடைந்த முன்னேற்றம் | இலக்கில் அடை ந்த முன்னேற்றம் |
| 1:10,000 அளவிடையில் புதிதாக தயாரிக்கப்பட்ட தாள்கள் | தாள்கள் | 72 | 91 | 126.4 |
| ஊக்குவிப்புக்கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் 1;10,000 அளவிடைத் தாள் தயாரிப்பு | தாள்கள் | 60 | 60 | 100.0 |
| 1:10,000 அளவிடையில் நாளது வரைவுபடுத்தப்பட்ட தாள்கள் | தாள்கள் | 90 | 90 | 100.00 |
| 1:1,000 அளவிடையிலான பூகோளத் தரவுகள் தரவுத் தளத்தில் உட்புகுத்தல் | சதுர. கிமீ | 60 | 58 | 96.7 |

அச்சிடப்பட்ட வரைபடங்கள் ஒளிப்பட அளவைசார் தரவுக்கணங்களைப் பயன்படுத்தி 1;10,000 அளவிடையிலான எண்முறையிலான பிரதேசவியல் தரவுத் தளமொன்று தயாரிக்கப்பட்டு இக்கிளையினால் பேணப்பட்டு வருகிறது. பூகோளத் தகவல் முறைமைத் தொகுதிப் பாவனையாளர்களுக்காக Arc GIS தரவு அமைப்பினால் தற்போது 1151 தாள்கள் (2013 ஆம் ஆண்டில் 151 புதிய தாள்கள், 90 நாளது வரைப்படுத்தப்பட்ட தாள்கள் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டன.) பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இத் தரவுகள் நிர்வாக எல்லைகள் , கட்டடங்கள்,பின்னல்,நீரியல்,காணிப் பயன்பாடு , இடப்பெயர்கள், தரைத்தோற்றம், போக்குவரத்து, ஆகிய தலைப்புகளில் 08 அடிப்படையிலான அடுக்குகளில் பேணப்படுகின்றன. இந்த அடுக்குகளிலுள்ள சகல அம்சங்களும் ஐந்து எண்களினால் GFCODE குறிப்பிடப் பட்டுள்ளதுடன் ஒவ்வொரு அம்சத்துக்கும் பிரத்தியேகமான எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஊக்குவிப்புக் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் வடமாகாணத்தில் தரவுகள் திரட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.கள இணைப்புடன் புதிதாய் நிறுவப்பட்ட தரவுத் தளத் திருத்தப் பிரிவுனூடாக திருத்தங்களும் செய்யப்பட்டன. இப்பிரிவு நிலஅளவையாளர்கள் வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஒளிப் படவியலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியது.

**இக்கிளையினால் பின்வரும் விசேட செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.**

- தேசிய எல்லை நிர்ணயக் கமிட்டிக்காக வரைபடங்கள் தயாரிக்கப்படும்போது கிராம அலுவலர் எல்லைகளும் நாளது வரைவு படுத்தப்பட்டது.
- LiDAR அளவை நிலைக்குத்துப் பிழையறு தன்மைக்கான அறிக்கையைப் பரிசீலிக்கும் பணிகளுக்கான இணைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- எண்முறைப் பிரதேசவியல் தரவுத் தளத்தைப் பேணிய Python செயற்றிட்டம் உருவாக்கப்பட்டது.

பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கான பிரதேசவியல் தரவுகளை தேவைப்படும்போதெல்லாம் 1:10,000 எனும் அளவிடையிலான பிரதேசவியல் தரவுத் தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். அத்தகைய தாள்களிலிருந்து பெறக்கூடிய பல்வேறு வடிவமைப்புகள் தொடர்பான தரவுகள் இணைப்பு 09 இல் தரப்பட்டுள்ளது.

## 7.5 மாநாடுகள் /செயலமர்வுகள் மற்றும் நானாவித நிகழ்ச்சித் திட்டங்கள்

❖ **புவி - விண்வெளிக் கழக மாநாடு - இலங்கை 2013 ஜூன் 06**

இலங்கையில் புவி மற்றும் விண்வெளி ஆர்வலர்கள் அனைவரையும் உள்ளடக்கும் ஆய்வாளர்கள் ,தொழில்நுட்பவியலாளர்கள் அறிஞர்கள் மற்றும் கொள்கைத் திட்டமிடுவோர் சகலரையும் பங்காளர்களாய் ஒன்றிணைந்த இம் மாநாடு இது தொடர்பிலான இந்நாட்டில் நடத்தப்பட்ட முதலாவது மாநாடாக அமைந்ததோடு இதன் சம ஒருங்கிணைப்பு பணிகளை இலங்கை நில அளவைத் திணக்களம் மேற்கொண்டது.










2013 ஜூன் 06ம் திகதி சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற புவி - விண் வெளிக்கழக மாநாட்டு நிகழ்வுகள் சில.

### ❖ 2013 Jaxa சிறுதிட்டம்

Jaxa சிறுதிட்டத்தின் முதல் கட்டம் நில அளவைத்திணைகளத்தால் ஒழுங்கு செய்ப்பட்டதுடன் 5 நாள் செயலமர்வில் 14 அமைப்புகள் கலந்துகொண்டன.



2013 Jaxa சிறு திட்ட முதல் கட்டம் நில அளவைக் கேட்போர் கூடத்தில் நடந்தபோது



2013 Jaxa சிறு திட்டச் செயலமர்வில் கலந்து கொண்ட நில அளவைத் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு நிறுவன உத்தியோகத்தர்கள்

- ❖ தகவல் திரட்டப் பாவிக்கப்படும் புதிய தொழில் நுட்பம் பற்றி பிரசாரம் செய்ய பயிலுர் வரைபடதொழில்நுட்ப உத்தயோகத்தர்களுக்கான 3நாள் Open Street Map பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தியத்தலாவை அளவையியல்,படமாக்கல் நிறுவனத்தில் நடத்தப்பட Jaxa (Japan Aerospace Exploration Agency )அனுசரணை வழங்கியது.

- ❖ சுற்றாடல் மற்றும் மீளுற்பத்திச் சக்திவள அமைச்சின் கீழியங்கும் வனபரிபாலனத் திணைக்களத்தால் செயற்படுத்தப்படும் REDD + திட்டத்தின் உறுப்பினராகப் ( 2013-2015) பணிபுரிதல்.

## 8.0 அளவை படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை

**அறிமுகம்**

அளவைப் படமாக்கல் நிறுவனம், 2013ஆம் ஆண்டிற்கான அதனுடைய செயற்பாடுகளை வருடாந்த செயற்திட்டங்களுக்கமைய "மாணவர்களின் முழு உள்ளாந்த கல்வித்திறனை அடையும் வகையில் அவர்களுக்கு இயலுமானவரையில் அளவையியல் படமாக்கல் துறையில் உயர்தரக் கல்விகளையும் தொழில்சார் அனுபவத்தையும் வழங்குவது" என்ற தனது குறிக்கோளை நிறை வேற்றியுள்ளது. மேலும் இந்நிறுவனம் பட்டப் பயிற்சி நெறிகள், உயர் டிப்ளோமா பயிற்சிநெறிகள் ஆகியவற்றையும் நடத்துகின்றது. அத்துடன் திணைக்களத்தில் பணி புரியும் நிலஅளவை யாளர்கள்,வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஒளிப்படஅளவை தொழில்நுட்பவியலாளர்கள், வான் ஒளிப்படவியலாளர்கள், தொலையுணர்வு தொழில்நுட்பயலா ளர்கள், ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோருக்கு பயிற்சிகளையும் வழங்குகின்றது. வருடாந்த திணைக்களப் பரீட்சைகளையும் நடா த்துகின்றது. தற்போது இந்நிறுவனம் சிரேஷ்ட பிரதி நிலஅளவையாளர் நாயகம் (பயிற்சி)/ பணி ப்பாளர் (அ.ப.நி) நிர்வாகத்தின் கீழ் செயற்படுகின்றது.

## 8.1 இந்த ஆண்டில் அளவை பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகள்

### 8.1.1 இவ்வாண்டில் நடத்தப்பட்ட கிரமமான பயிற்சி நெறிகள்.

| இல. | பயிற்சி நெறியின் பெயர் | காலம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்யப்படும் திகதி | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | நில அளவை விஞ்ஞானத்தில் இளமானிப் பட்டப் பயிற்சிநெறி -12 (BDC12) | 4 வருடங்கள் | 2011.10.03 | 2015.10.02 | 111 |
| 02 | நில அளவை விஞ்ஞானத்தில் உயர் டிப்ளோமா பயிற்சிநெறி (தொலைக் கல்வி) - 28 (HDC 28) | 1 1/2 வருடங்கள் | 2011.12.12 | 2013.06.11 | 36 |
| 03 | இலங்கைத் தொழில் நுட்ப சேவை உத்தியோகத்தருக்கான டிப்ளோமா பயிற்சிநெறிகள் - 5 ( SLTS 05) | 02 வருடங்கள் (01 வருடம் களப் பயிற்சி உட்பட) | 2011.02.01 | 2013.01.31 | 08 |
| 04 | இலங்கைத் தொழில் நுட்ப சேவை உத்தியோகத்தருக்கான டிப்ளோமா பயிற்சிநெறிகள் (உயர்தரம்) - 6 ( SLTS 06) | 2 வருடங்கள் | 2013.03.04 | 2015.03.03 | 43 |

### 8.1.2 திணைக்கள அலுவலர்களுக்கு இந்த ஆண்டில் நடத்தப்பட்ட குறுகிய காலபயிற்சிநெறிகள்.

| இல. | பாடநெறியின் பெயர் | காலம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | குழுக்களின் தொகை |
|---|---|---|---|---|
| 01 | சிகாஸ் பயிற்சித் திட்டம்-2013 உதவிப்பபணிப்பாளர் (நிதி) மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு | 02 நாட்கள் | 106 | 02 |
| 02 | புது நியமனம் பெற்ற நிலஅளவை அத்தியட்சகர்களுக்கான ஈடுபடுத்தல் பயிற்சிப் பாடநெறி | 05 நாட்கள் | 34 | 01 |
| 03 | சிரேஷ்ட வரைபடத் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான தொழில்நுட்ப நிர்வாக செயல் முறைகள் குறித்த பயிற்சிப்பாட நெறி | 05 நாட்கள | 42 | 02 |
| 04 | அரசாங்க நிலஅளவையாளர்களுக்கான Leica Total Station பயிற்சிப்பாட நெறி | 02 நாட்கள் | 44 | 01 |

### 8.1.3 ஏனைய நிறுவனங்களுக்காக நடத்தப்பட்ட குறுகியகாலப் பயிற்சி நெறிகள்

இந்தப் பயிற்சிநெறிகள் ஏனைய நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் நடத்தப்பட்டது.

| இல. | பாடநெறியின் பெயர் | காலம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | குழுக்களின் தொகை |
|---|---|---|---|---|
| 01 | இலங்கை மின்சார சபையின் மேற்பார்வை அலுவலர்களுக்கான புறவரை அளவைகள் மற்றும் அளவை உபகரணங்களைச் செயற்படுத்தும் முறைகள் குறித்த பயிற்சிப் பாடநெறி | 02 நாட்கள் | 20 | 01 |
| 02 | இலங்கை விமானப்படைசார் நிலஅளவைக் கள உதவி அலுவலர்களுக்கான நிலஅளவைக் கள உதவியாளர் பயிற்சிப் பாடநெறி | 10 நாட்கள் | 08 | 01 |
| 03 | தியத்தலாவை இலங்கை விமானப்படையின் பயிற்சிப் படையணி மாணவர்களுக்கான வரைபட வாசிப்பு மற்றும் GPS நுட்பம் தொடர்பிலான பயிற்சிப் பாடநெறி | 02 நாட்கள் | 24 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | தியத்தலாவை மறைந்து சுடும் பயிற்சிப் பாடசாலைசார் சுடுவோர்க்கான வரைபட வாசிப்பு மற்றும் GPS பயிற்சி | 02 நாட்கள் | 50 | 01 |
| 05 | மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவுடன் இணைந்து நடத்தப்பட்ட நிலஅளவைக்கள உதவியாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறி (N/V/Q 2/3/4 மட்டும்) | 10 நாட்கள் | 411 | 05 |
| 06 | இலங்கை விசேட அதிரடிப் படையணி அலுவலர்களுக்கான GPS மற்றும் GIS குறித்த பயிற்சிப் பாடநெறி | 10 நாட்கள் | 36 | 01 |
| 07 | தென்மாகாணக் காணிஆணையாளர் திணைக்களத்தின் நிலஅளவைக் கள உதவி அலுவலர்களுக்கான நிலஅளவைக் கள உதவியாளர் பயிற்சிப் பாடநெறி | 10 நாட்கள் | 7 | 01 |
| 08 | மொனராகலை தொழில் நுட்பக் கல்லூரி சிவில் பொறியியலாளர் பாடநெறி பயிலும் மாணவர் களுக்கான நவீன அளவை உபகரணங்கள் பற்றிய பயிற்சிப் பட்டறை | 01நாள் | 35 | 01 |
| 09 | ஊவா மாகாணக் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர்களுக்கான GPS தொழில் நுட்பம் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 01 நாள் | 18 | 01 |
| 10 | தியத்தலாதவை இலங்கை விமானப் படைசார் பீரங்கிப்படைப் பிரிவினர் களுக்கான வரைபட வாசிப்பு மற்றும் GPS நுட்பம் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 01 நாள் | 22 | 01 |
| 11 | தென்மாகாணத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்குமான நிலம் அளத்தல் மட்டம் பார்த்தல் GPS தொழில் நுட்பம் தொடர்பிலான பயிற்சிப் பாடநெறி | 01 நாள் | 80 | 02 |
| 12 | வளிமண்டலவியல் திணைக்கள அலுவலர்களுக்கான வரைபட வாசிப்பு மற்றும் GPS நுட்பம் தொடர்பிலான பயிற்சிப் பாடநெறி | 02 நாட்கள் | 40 | 01 |
| 13 | பண்டாரவளை நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலக பயிலுனர் பொறியியலாளர்களுக்கான GPS நுட்பம் பற்றிய நிகழ்ச்சி | 01 நாள் | 27 | 01 |
| 14 | கட்டுநாயக்கா பொறியியல் நுட்ப நிறுவன சிவில் பொறியியல் மாணவர்களுக்கான நிலஅளவைப் பயிற்சிப் பட்டறை | 06 நாட்கள் | 142 | 02 |
| 15 | வடமேல்மாகாணக் காணிஆணையாளர் திணைக்களக் காணி உத்தியோகத்தர் களுக்கான அளவை அலுவல்கள் குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 02 நாட்கள் | 29 | 01 |
| 16 | வடமேல்மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர் களுக்கான Total Station பற்றிய அறிமுகப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சி | 04 நாட்கள் | 40 | 01 |
| 17 | மின்னேரியா பீரங்கிப்படைப் பயிற்சிப் பாடசாலை அலுவலர்களுக்கான நவீன அளவை உபகரணப்பாவனை குறித்த பயிற்சி. | 02 நாட்கள் | 18 | 01 |

இவற்றுக்கு மேலதிகமாக வேறும் நிறுவனங்களுக்காக 15 ஒருநாள் பாடநெறிகள் நடாத்தப்பட்டதோடு அவற்றில் 896 பேர் பங்குபற்றியுள்ளனர்.

## 8.2. 2013ஆம் ஆண்டில் புவிப்பாத்த நிலஅளவைக் கிளையின் செயற்பாடுகள்.

தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் நிறுவப்பட்ட புவிப்பாத்த நிலஅளவைப் பிரிவு மற்றும் அதற்கு இணையாக தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்ட புவிப்பாத்த நிலஅளவைப் பிரிவு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட பாலனப் புள்ளிகள் உருவாக்கம் மற்றும் ஏனைய அளவைகளில் காணப்பட்ட முன்னேற்றம் பற்றிய விபரம் பந்தி 6.1 இல் காட்டப்பட்டுள்ளது. அச் செயற்பாடுகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

### 8.2.1 பாலனப் புள்ளிகள் உருவாக்கம்

| பணி | அ.ப.நி | மேல் மாகாணம் | வட மேல் மாகாணம் | தென் மாகாணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புவிசார் இடமறியும் முறைமை (GPS) பாலனப் புள்ளிகள் | 3095 | 942 | 1380 | 140 | 5557 |
| ஏனைய நிலஅளவைகளுக்கு சமமான புவிசார் இடமறியும் முறைமை (GPS) பாலனப் புள்ளிகள் | 4771 | 0 | 716 | 155 | 5642 |
| தாபிக்கப்பட்ட மொத்த பாலனப் புள்ளிகள் | 7866 | 942 | 2096 | 295 | 11199 |
| தாபிக்கப்பட்ட பாலனப் புள்ளிகளுக்கு சமமான நில அளவை மாதங்கள் | 123.80 | 37.68 | 55.20 | 5.60 | 222.28 |
| ஏனைய அளவைகளுக்கு சமமான நிலஅளவை மாதங்கள் | 190.84 | 0 | 28.63 | 6.20 | 225.67 |
| 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட நிலஅளவை மாதங்களின் மொத்த எண்ணிக்கை | 314.64 | 37.68 | 83.83 | 11.80 | 447.95 |
| முன்னேற்றம் (%) | 303 | 65 | 182 | 91 | 203 |

### 8.2.2.1 ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட விசேட அளவைப் பணிகள் - தியத்தலாவை புவிபாத்த நில அளவைப் பிரிவு

| இல | பணி |
|---|---|
| 1 | வடக்கு அதிவேகப் பாதைத் திட்டத்தின் கட்டம் 1,கட்டம்2, கட்டம்2B மற்றும் கட்டம்3 தொடர்பில் பாலன அளவைகள் மேற்கொள்ளல் |
| 2 | வடக்கு அதிவேகப் பாதைத் திட்டத்தின் கட்டம் 2,கட்டம் 2B,கட்டம் 4 ஆகியவற்றுக்காக பூமியில் பாலனப் புள்ளிகள் நிறுவுதல் |
| 3 | தெற்கு அதிவேகப்பாதைத் திட்டத்திற்காக மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பாலன அளவைகள் மேற்கொள்ளல் |
| 4 | மேல் எலஹேர திட்டத்திற்காக அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் பால அளவைகள் மேற்கொள்ளல் |
| 5 | நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள கீழ் உமா ஓயா, ஹீன்கங்கை மற்றும் கூரைத்திட்டங்களுக்காக GPS பாலனப் புள்ளிகள் நிறுவுதல் |
| 6 | கண்டி,திகன உத்தேச உள்ளக விமான நிலையத்திற்கென பிரதேசவியல் அளவைகள் மற்றும் GPS பாலனப் புள்ளிகள் நிறுவுதல் |
| 7 | சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்காக வடமாகாணத்தில் கரும்புக் கைத்தொழில் ருத்திக்குப் பொருத்தமான பிரதேசங்களைக் காண்பிக்கும் வரைபடங்களைத் தயாரித்தல் |

| இல | பணி |
|---|---|
| 8 | நுவரேலியா மாவட்டத்தில் வன அளவைகள் மற்றும் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்களுக்கான கடத் திரள் வரைபடங்களை தயாரித்தல் தொடர்பில் GPS பாலனப் புள்ளிகள் நிறுவுதல் |
| 9 | இலங்கை விமானப்படை சார்ந்த விமான நிலையங்களதும் விமான ஓடு பாதைகளுக்கான ள்கூற்றுக்கள் GPS அவதானிப்பு மூலம் வழங்கல் |
| 10 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்காக கண்டியை அண்மிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு GPS பாலனப்புள்ளிகள் நிறுவுதல் |
| 11 | இலங்கை மின்சார சபைக்கான ஹொரணை - கந்தான 33 KV கம்பி வடப் பாதைக்கான GPS பாலனப் புள்ளிகள் தாபித்தல் |
| 12 | இடர் முகாமைத்துவ மத்திய நிலைய மூலம் செயற்படுத்தப்படும் RIMES சுனாமிப் பேரலை இடர் முகாமைத்துவத் திட்டத்திற்கென அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பூமியில் பாலனப் புள்ளிகள் தாபித்தலும், விவர அளவைகள் மேற்கொள்ளலும் |
| 13 | வீதி விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கலுபஹன - ஹல்தும்முல்லை – ஹப்புத்தளை , உடபுசல்லாவ – தம்பகொல்ல , புரூக்சைட் - ஹைஹபொரஸ்ட், அதிகாரிகம - ஹங்குராங்கெத்த, ஹிக்கடுவை - பத்தேகம -தெற்கு அதிவேகப்பாதை,போதாகம - ஹம்பேகமுவ - கல்தொட்ட, ஹப்புத்தளை -பொரலந்தை, ஹக்கல -போட் மக்டானல்ட், யகாவெவ - மகோகான்கஸ்கட,கேகாலை கிளைப் பாதை ஆகிய பாதைகளில் GPS பாலனப் புள்ளிகள் தாபித்தல் |
| 14 | ஆரம்ப GPS பாலன வலையமைப்பை விஸ்தரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் இரண்டாம் மட்ட பாலனப் புள்ளிகள் நிறுவுதல் |

8.2.2.2 ஆண்டினுள் மேற் கொள்ளப்பட்ட விசேட அளவைப் பணிகள்.-

வடமேல் மாகாண விசேட அளவைகள் பிரிவு

| இல | பணி |
|---|---|
| 01 | ரன்திவெல மற்றும் கொஸ் பொது ஓய திட்டங்களுக்காக **GPS** பாலனப் புள்ளிகள் தாபித்தல் |
| 02 | உத்தேச குருநாகல் -ஹபரண புகையிரதப் பாதைக்கான *31.9* கி.மீ மையக்கோடு நிறுவுதல் |
| 03 | தேசத்திற்கு மகுடம் 2014 கண்காட்சிக்காக வடமேல் மாகாணத் தொல்லியல் இடங்களை வரைபடமாக்க **GPS** தரவுளைப் பெறுதல் |
| 04 | **A9** வீதியில் மாத்தளை நகரையும் சூழலையும் விஸ்தரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நடவடிக்கைகளுக்காகவும் கேகாலைக் கிளைப் பாதையையும் நகரையும் அபிவிருத்தி செய்யவும் **GPS** பாலனப் புள்ளிகள் தாபித்தல் |
| 05 | கிண்ணியா- உப்பாறு பிரதேசத்தில் கரையோரப் பாதுகாப்பு முகாமைத் திட்டத்திற்கென **GPS** பாலனப் புள்ளிகள் தாபித்தல் |
| 06 | குருநாகல் நகர நீர் வழங்கல் திட்டத்திற்கென பாலனப் புள்ளிகள் தாபித்தல் |
| 07 | தெஹியோவிட்ட - தெரணியகலை - நூரி, கஹாவத்தை கிளைப் பாதை, கேகாலை கிளைப் பாதை ஆகிய வீதிகளில் பாலனப் புள்ளிகள் தாபித்தல் |
| 08 | ஆரம்ப பாலன வலையமைப்பை விஸ்தரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் குருநாகல்,புத்தளம், திருகோணமலை, அனுராதபுரம், மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் இரண்டாம் மட்ட பாலனப் புள்ளிகள் தாபித்தல் |

### 8.2.2.3 ஆண்டினுள் மேற் கொள்ளப்பட்ட விசேட அளவைப் பணிகள்

### தென் மாகாண விசேட அளவைகள் பிரிவு

| இல | பணி |
|---|---|
| 01 | பத்தேகம நகர அபிவிருத்தித் திட்டத்திற்கென 80 ஹெக்டயர் பிரதேசத்தில் விபர அளவைகள் அடங்கலாக உருவரைக் கிடைப்படம் தயாரித்தல் |
| 02 | உத்தேச மாத்தறை - கதிர்காமம் புகையிரதப் பாதைக்காக மாத்தறையிலிருந்து பெலியத்தை வரை 27 கி.மீ உத்தேச பாதை இரு மருங்கிலும் உரித்தான எல்லைகளை உறுதிசெய்யும் அளவைகள் |

### 8.2.3.1 நுட்பமான மட்டமிடல் - தியத்தலாவைப் புவிபாத்த நில அளவைப் பிரிவு

| இல | பணி |
|---|---|
| 01 | மத்தல மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் விமானத் தரிப்பிடங்களில் நுட்பமான மட்டம் பார்த்தல் |
| 02 | உமா ஓயா பன்முக வேலைத்திட்டத்திற்காக பதுளை நகரில் பீடக் குறிகள் நிறுவுதல் |
| 03 | பஸ்னாகொடை நீரதேக்கத் திட்டத்திற்கான அத்தனகல்லை பிரதேசத்தில் பீடக்குறிகள் நிறுவுதல் |
| 04 | அம்பாறை, டெம்பிட்டிக்குளப் புனரமைப்புப் பணிகளுக்காகப் பீடக்குறிகள் நிறுவுதல் |
| 05 | வடக்கு அதிவேகப் பாதை, தெற்கு அதிவேகப் பாதை மேல் எலஹெர கால்வாய் அளவைகளுக்காக நுட்பமான மட்டமிடல் அளவைகள் |

### 8.2.3.2 நுட்பமான மட்டமிடல்

| இல | பணி |
|---|---|
| 01 | குருநாகல் நகர நீர்வழங்கல் திட்டத்திற்காக நுட்பமான மட்டமிடல் கோட்டினை நிறுவுதல் |

## 8.3 2013 ஆம் ஆண்டில் பரீட்சைக் கிளையினால் நடத்தப்பட்ட பரீட்சைகள்

| இல. | பரீட்சையின் பெயர் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தகைமையுடைய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட திகதி | சமூகமளித்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | முடிவுகள் அறிவிக்கப்பட்ட திகதி | சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை | நுணசித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவினம் (ரூபா) | பரீட்சார்த்தி ஒருவருக்கான செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | நில அளவை உபகரண தொழில் நுட்ப வியலாளர்களின் வகுப்பு 1 லிருந்து விசேட தரத்துக்கு பதவியுயர்வுக்கான திணைக்களப் பரீட்சை | 01 | 01 | 2013/03/30 | 01 | 2013/05/31 | 01 | - | 11200.00 | 11200.00 |
| 02 | இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களை வகுப்பு 11 "ஆ" இலிருந்து வகுப்பு 11¸ அ க்கு பதவியுயர்த்துவதற்கான முதலாவது திணைக்களப் பரீட்சை (வரைபடதொழில் நுட்ப உத்தியோகத்தர் களுக்கானது) | 12 | 12 | 2013/06/29-30 | 10 | 2013/09/17 | 06 | 04 | 44470.00 | 2615.00 |

| இல. | பரீட்சையின் பெயர் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தகைமையுடைய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட திகதி | சமூகமளித்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | முடிவுகள் அறிவிக்கப்பட்ட திகதி | சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை | நூனசித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவினம் (ரூபா) | பரீட்சார்த்தி ஒருவருக்கான செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03 | இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களை வகுப்பு 11 "ஆ" இலிருந்து வகுப்பு 11, அ க்கு பதவியுயர்த்துவதற்கான முதலாவது திணைக்களப் பரீட்சை (ஒளிப்படஅளவை தொழில் நுட்பவியலாளர் களுக்கானது) | 06 | 06 | 2013/06/29-30, 2013/07/01-02 | 06 | 2013/09/17 | 04 | 02 | | |
| 04 | அங்கீகரிக்கப்பட்ட படவரைஞர்கள் ஆக நி.அ.நாயகத்தின் சான்றிதழ் வழ ங்குவதற்கான பரீட்சை. பகுதி - 1 ( 2012 ஏப்ரல் வர்த்தமானி அறிவித் தல்) | 215 | 127 | 2013/07/20 | 85 | 2013/09/18 | 20 | 65 | 44950.00 | 354.00 |
| 05 | இலங்கை தொழில்நுட்ப சேவை உத் தியோகத்தர்களை வகுப்பு 11 "அ" இலிருந்து வகுப்பு 1 க்கு பதவியுயர்வுக்கான பரீட்சை (வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் களுக்கானது) 2 வது பரீட்சை | 08 | 02 | 2013/09/28-29 | எந்தவோர் அபேட்சகரும் பரீட்சைக்குதோற்றவில்லை. | | | | 31680.00 | 15840.00 |
| 06 | இலங்கை நிலஅளவையாளர் சேவை யின் வகுப்பு 11 தரம்11 இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலா வது வினைத்திறன் தடைகாண் பரீட்சை | 77 | 76 | செப்தெம்பர் மாத நடு/ கடைசி | 2014 ஜனவரி மாதம் நடத்தப்படவுள்ளது | | | | | |
| 07 | அங்கீகரிக்கப்பட்ட படவரைஞர்கள் ஆக நி.அ.நாயகத்தின் சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை. பகுதி - 11 ( 2012 ஏப்ரல் வர்த்தமானி அறிவித் தல்) | - | 20 | 2013/10/26-27 | 18 | 2014/01/06 | 08 | 10 | 33400.00 | 1670.00 |
| 08 | அரச மற்றும் மாகாண அரச சேவை தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படும் (சிவில் எந்திரவியல்) அளத்தல் மற்றும் மட்டமாக்கல் செயன்முறைப்பரீட்சை 2005 முதல் 2009 வரை (2010) 1 வது பரீட்சை | 68 | 68 | 2012/10/01 – 2012/12/22 | 54 | 2013/08/29 | 72 | 26 | - | - |
| 09 | அரச மற்றும் மாகாண அரச சேவை தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படும் (சிவில் எந்திரவியல்) அளத்தல் மற்றும் மட்டமாக்கல் செயன்முறைப்பரீட்சை 2005 முதல் 2009 வரை (2010) 11 வது பரீட்சை | 104 | 104 | 2012/10/01 – 2013/06/08 | 68 | | | | | |
| 10 | நில அளவைத் திணைக்கள நில அளவையியல் பாடநெறிக்காக திணைக்கள அலுவலர்ளைச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்தபோட்டிப் பரீட்சை | 08 | 08 | 2013/04/21-22 | 07 | பெறுபேறுகள்வெளியிடப்பட வில்லை | | | 9000.00 | 1125.00 |
| 11 | நில அளவைத் தினைக்களத்திற்கு இலங்கைத் தொழில் நுட்ப சேவை உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை | - | 545 | 2013/12/07 | 425 | 2013/12/19 | 225 | 200 | 120000.00 | 282.00 |

## 09. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

திணைக்களத்தில் இக்கிளையின் பிரதான செயற்பாடுகளாக திணைக்களத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள பலவீனமான விடயங்களை இனம் காணுதல், சிபார்சுகளின் ஊடாக அந்த நிலைமைகளை சீராக்குதல், மென்பொருள் அபிவிருத்திகள் , நிலஅளவைச் சஞ்சிகைகளை வெளியிடுதல், தேவைப்படும் போது திணைக்கள நிலஅளவைப் பிரமாணங்களை மீளாய்வு செய்தல், திணைக்களத்தில் நவீன தொழில்நுட்பம் தொடர்பில் அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் நவீன தொழில்நுட்பம் மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மென்பொருள் கணனிப்பாவனையை திணைக்களத்திற்கு அறிமுகப்படுத்தல், திணைக்களத்தின் உயர்தர நியமங்களை பேணுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுமுகமாக, பின்வரும் மென்பொருள் அபிவிருத்தியும் மற்றும் தொடர்புடைய வேலைத்திட்டங்களும் இக்கிளையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 9.1 மென்பொருள் அபிவிருத்தி

I அரசாங்க நிலஅளவையாளர்களுக்கும், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்களுக்கும் SDCAD கணனி மென்பொருளைப் பெறுவதற்கு ஏதுவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 9.2 நிலஅளவை சஞ்சிகைகள் / நிலையியல் கட்டளைகள்/திணைக்கள நிலஅளவை ஒழுங்கு விதிகள்

i. நிலஅளவைச் சஞ்சிகை 81 ஆம் இதழ் வெளியிடப்பட்டது.

ii. திணைக்கள நிலையியல் கட்டளைகளின் மீளாய்வு வேலைகள் மூன்று மொழிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது. (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

iii. திணைக்கள நிலஅளவைப் பிரமாண ஒழுங்குவிதிகளில் சிங்களம் 80%, ஆங்கிலம் 60% தமிழ் 60 % மொழிபெயர்ப்புப் பணிகள் பூரணமாகியுள்ளது.

## 9.3 " தேசத்திற்கு மகுடம் " தேசிய அபிவிருத்தி கண்காட்சி - 2013

மார்ச் 23 ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை அம்பாறையில் நடைபெற்ற " தேசத்திற்கு மகுடம் " தேசிய அபிவிருத்தி கண்காட்சி - 2013 இற்காக கண்காட்சிக் கூடத்தை (நவீன அளவை உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டது) திறந்த வெளியரங்கக் காட்சிகளாக திருப்திகரமாக ஒழுங்கு செய்தது.









2013 அம்பாறையில் நடத்தப்பட்டதேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் நில அளவைக் கண்காட்சிக் கூடம்

## 10.0 காணி உரித்துப் பதிவு அளவைக் கிளை

1998ம் ஆண்டின் 21ஆம் இலக்க காணி உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள சகல அரசாங்க மற்றும் தனியார் காணிகளுக்கும் காணி உரித்து பத்திரத்தை வழங்குவதை நோக்காகக் கொண்டு காணி, காணி அபிவிருத்தி அமைச் சினால் நிறைவேற்றப்படும் “பிம்சவிய” வேலைத்திட்டத்திற்கு அவசியமான கடத்திரள் படங்களும், கடத்திரள் கிடைப்படங்களும் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவ் அளவைகள் நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திலுள்ள காணி உரித்துப் பதிவுக் கிளையின் ஒருங்கிணைப்புடன் திணைக்களத்தின் கள அலுவலர்களினாலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர்களாலும் மேற்கொள்ளப்படுகிறது.

2013ம் அண்டளவில் பிம்சவிய வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 90 பிரதேச செயலகப் பிரிவுகளில் அளவைப்பணிகள் ஆரம்பிக்கப்பட காணி காணி அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அவற்றில் 54 பிரிவுகளில் மாத்திரம் அளவைப் பணிகளைப் புர்த்தி செய்ய திணைக்களத்தினால் முடிந்துள்ளது. அந்த 54 பிரிவுகளில் 8 பிரிவுகள் வடக்க கிழக்கு மாகாணங்களுக்குள் அடங்குவதோடு அவற்றில் அரச காணிகள் தொடர்பிலான அளவைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் போதியளவு நிதி ஒதுக்கீடுகள் கிட்டாததால் எதிர்பார்த்தளவு தனியார் அளவையாளர்களை சேவையில் ஈடுபடுத்த முடியாது போன காரணத்தால் 2013 ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வேலைத்திட்ட நடைமுறைக்கமைய அளக்கப்பட வேண்டிய காணிகள் பற்றிய தகவல்கள் கிடைப்பதும் தாமதமாகி அரசாங்க நிலஅளவையாளர்களது பற்றாக்குறை வருடம் முழுவதும் நிலவியமை கடந்த ஆண்டை விடக்குறைந்தளவு காணித்துண்டுகள் அளக்கப்பட ஏதுவானது.

அதற்கமைய இவ்வாண்டில் பங்களிப்பு நல்கிய அரசாங்க நிலஅளவையாளர்களால் 74762 காணித்துண்டுகளும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்களால் 35868 காணித்துண்டுகளும் அளவை செய்யப்பட்டு மொத்தமாக 110630 கடத்திரள் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன.

மேலதிகமாக காணி உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் நிலஅளவை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ள பதிவுசெய்யப்பட்ட உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்களுக்கு அவசியமான அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ சான்றிதழை அவர்களுக்கு வழங்கும் முகமாக திணைக்களம் காணி உரித்துப் பதிவு அளவைகள் தொடர்பில் பயிற்சி பட்டறைகளை அவர்களுக்காக நடத்தியது. மேலும், உரித்து பதிவு அளவை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் மக்களும் ஏனைய வெளி நிறுவனங்களின் அலுவலர்களும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக நடத்தப்பட்ட விழிப்புணர்வு கூட்டங்களுக்கான ஆளணி வளங்களை வழங்கவும் இத்திணைக்கள உத்தியோகத்தர் குழாம் துணை நின்றது.

பிம்சவிய வேலைத்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் 506.191 மில்லியன் ரூபா தொகையை இத்திணைக்களம் செலவிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பிம்சவிய வேலைத் திட்டம் செயல்படுத்தப்படுகையில் அதற்கு அமைவாக மாவட்ட நில அளவை அலுவலகங்களை மேம்படுத்தும் தேவை ஏற்பட்டதால்,அதன் பிரகாரம் இரத்தினபுரி, கம்பஹா, கண்டி, மொனராகலை, மாத்தளை, குருநாகல், பதுளை, அம்பாந்தோட்டை, ஆகிய அலுவலகங்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் பிம்சவிய வேலைத் திட்டம் செயற்படுத்தப்படும் பிரதேச செயலகப் பிரிவுகள் இணைப்பு 10ல் காட்டப்பட்டுள்ளது.

## 11.0 கணக்காய்வு

நில அளவைத் திணைக்களத்தின் செயற்பாடுகளை கணக்காய்வு செய்வதன் அடிப்படையில் அரசாங்க கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் அலுவலர்களைக் கொண்டதாக எமது திணைக்களத்தில் அதற்கென தனியான ஒரு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வுக் கிளையினால் கணக்காய்வு சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**உள்ளகக் கணக்காய்வுக் கிளை**

உள்ளகக் கணக்காய்வுக் கிளை நில அளவையாளர் நாயகத்தின் நேரடிக் கண்காணிப்பில் செயற் படுகின்றது. இதற்கமைய 2013 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய நிலஅளவையாளர் நாயகம் , பணிப்பாளர் நாயகம் (முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்), கணக்காய்வாளர் நாயகம் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் சகல கணக்குப்

பரிசோதனைகளும் மேற் கொள்ளப்பட்டன. அந்த வகையில் நிதிக் கட்டுப்பாடு, தாபன முகாமைத்துவம் ஆகியவற்றை முறையாகக் கையாள்வதற்கு ஏதுவாக, திறைசேரி சுற்று நிருபம் இல: IA1/2001/1 மற்றும் முகாமைத்துவ கணக் காய்வுத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டு கணக்காய்வுச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் வழமையான கணக்காய்வு முறைகளைவிட முறைமை விரிவாக்கத்திற்கும் செயற்பாடுகள் விரிவாக்கத்திற்கும் விசேட கவனம் செலுத்துவதனால் திணைக்களத்தின் ஆககங்களை அதிகரிக்க முடியும்.

இதற்கமைய 2013 ஆம் ஆண்டில் 06 மாகாண நிலஅளவை அலுவலங்கள், 14 மாவட்ட நிலஅளவை அலுவலங்கள், மற்றும் பிரதான காரியாலயத்தில் 04 விசேட பரிசோதனைகள் அடங்கலாக 24 அலுவலகங்களில் கணக்காய்வு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே இவ்வாண்டில் முன்னைய ஆண்டை விட நிதிக்கட்டுப்பாடு , தாபன முகாமைத்துவம் ஆகியவற்றில் சிறந்த முன்னேற்றம் காட்டப் பட்டது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## 12.0 முன்னேற்றக் கிளை

இக்கிளையினால் பிரதானமாக கீழே குறிப்பிடப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படுகிறது.

### 12.1 செயலாற்றுகை அறிக்கை

2012 ஆம் ஆண்டிற்கான இச் செயலாற்றுகை அறிக்கை உரிய முறையில் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

### 12.2 நாளாந்தம் பெறப்படும் தபால்களை பாகுபடுத்துதல்

வருடம் முழுவதும் நாளாந்தம் பெறப்படும் தபால்களை பாகுபடுத்தி உரிய நேரத்திற்கு அந்தந்த கிளை களுக்கு கிரமமாக விநியோகிப்பதனூடாக நிர்வாகச் செயற்பாடுகள் சீராகவும், சிறப்பாகவும் நடைபெற உதவுதல்

### 12.3 சுற்றறிக்கைகளை விநியோகித்தல்

ஒவ்வொரு கிளைகளுக்கும் உரியதாக நிலஅளவையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் பின்வரும் சுற்றறிக்கைகளை அச்சிடப்பட்டு உரிய காலப்பகுதியில் திணைக்கள பதவி நிலை அலுவலர்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன், நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள அலுவலகங்களுக்கும் இந்த சுற்றறிக்கை கள் தபால் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

| சுற்றறிக்கை வகைகள் | சுற்றறிக்கை எண்ணிக்கை |
|---|---|
| அத்தியட்சகர் சுற்றறிக்கை | 01 |
| அத்தியட்சகர் சுற்றறிக்கை கடிதம் | **04** |
| மேற்பார்வை சுற்றறிக்கை | 03 |
| மேற்பார்வை சுற்றறிக்கை கடிதம் | **07** |
| கள அலுவலர் சுற்றறிக்கை | 04 |
| கள அலுவலர் சுற்றறிக்கை கடிதம் | 24 |
| அலுவலக அலுவலர் சுற்றறிக்கை | 01 |
| அலுவலக அலுவலர் சுற்றறிக்கை கடிதம் | 32 |

### 12.4 கல்வி சுற்றுலா

இத்திணைக்களத்தின் பல்வேறு செயற்பாடுகள் பற்றி படிப்பதற்காக வருகை தந்த பல்கலைக்கழக மாணவர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளின் விடயங்கள் பற்றி பயில்வதற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டது. இவ்வாண்டில் பல்கலைக்கழக மாணவர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பொருட்டு 15 கல்வி செயலமர்வுகள் நடத்தப்பட்டது.

## 13.0 ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### 13.1 பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகள்:

இந்தச்சேவை திணைக்களத்தின் மேற்பார்வையுடன் மீளாய்வு காலப்பகுதி முழுவதையும் உள்ளடக்கியதாக தனியார் துறை நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளது. ரிலையவில் அன்ட் அலன்ட் செக்கி யூரிட்டி சேர்விஸ் தனியார் நிறுவனம் திணைக்களத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை சிறப்பான முறையில் வழங்கியுள்ளது. அதேவேளை நிபுணி சுத்திகரிப்பு சேவை (தனியார்) நிறுவனம் அலுவலகச் சுற்றாடலை மிகவும் தூய்மையாகவும், அழகாகவும் வைத்திருப்பதற்கு தமது சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளதுடன் மேற்கூறிய பணிகளுக்கும் உதவியுள்ளது. எனவே அவர்களுக்கு எனது விசேட பாராட்டுதல்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### 13.2 ஊழியர்களின் சேமநலன்கள்

வெவ்வேறு பிரிவுகளின் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட சேமநல அலுவலர் களினூடாக ஊழியர்களுக்கான சேமநலன்கள் வழங்கப்பட்டுள்ளது. வழமையான சேமநலச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, பின்வரும் விசேட சேவைகளும் இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

i. புதிய வருடத்தின் முதல் நாள் ஜனவரி 01 ஆம் திகதி கடமைகளை ஆரம்பிக்க முன் “பிரித் ஓதும்” வைபவம் ஒன்று திணைக்களத்தில் நடத்தப்பட்டதுடன், சகல ஊழியர்களுக்கும் பால்சோறும் வழங்கப்பட்டது.
ii. சிங்கள, தமிழ் புதுவருட கொண்டாட்ட நிகழ்வுகளில் திணைக்களத்தின் சகல ஊழியர்களும், அவர்களின் பிள்ளைகளும் பங்குபற்றியதுடன், விளையாட்டுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.
iii. சிங்கள , தமிழ் புதுவருடத்தினை முன்னிட்டு திணைக்கள அலுவலர்கள் வருட இறுதியில் இலத்திரனியல் உபகரணங்கள், ஆடை வகைகள். புத்தகங்கள், பாதணிகள். மற்றும் வீட்டு பாவனைப் பொருட்கள் என்பவற்றை இலகு கொடுப்பனவு அடிப்படையில் சலுகை விலையில் வாங்குவதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது
iv. ஊழியர்களின் சிறுபராயத்தினரைக் கவனிப்பதற்காக சிறுவர் பராமரிப்பு நிலையம் அதிகரிக்கப்பட்ட வசதி களுடன் தொடர்ந்து பேணப்படுகிறது.
v. சலுகை விலை அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் நலன்புரி சில்லறை விற்பனை நிலையம் ஒன்று மதியபோசன இடைவேளையில் நடத்தப்பட்டு வருகிறத.
vi. வெசாக் கொண்டாட்டம், நவராத்திரி விழா போன்றவற்றை நடத்துவதன் மூலமும், வருடாந்த இசை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலமும் திணைக்கள ஊழியர்களின் மனோநிலைக்கு புத்துணர்ச்சி அளிக்கப் படுகிறது.
vii. ஊழியர்களின் சுகநலன்களை முன்னிட்டு மருத்துவ முகாம்கள், வைத்திய ஆலோசனை உதவித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.
viii. தலைமைக்காரியாலயத்திலுள்ள பல்வேறு கிளைகளிற்கு முதல் உதவிப் பெட்டிகளுக்காக தேவைப்படும் அத்தியாவசிய மருந்துகள் வழங்கப்பட்டன.

மேலும் கூட்டுறவுச் சிக்கனக் கடன் சங்கம், விளையாட்டுக்கழகம், பத்திரிகை வாசிப்பு மண்டபம் , நூல் நிலையம் என்பன சேமநல ஊழியர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் திருப்திகரமாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

## 14.0 முடிவுரை

மீளாய்வுக்குரிய ஆண்டில் திட்டமிடப்பட்ட இலக்குகளையடைய முடிந்துள்ளதோடு, மேலதிகமாக அரசின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களைப் போன்றே சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான அவசர அளவை மற்றும் வரைபடப் பணிகளையும் மிக வெற்றிகரமாக நிறைவேற்றவும் திணைக்களத்தால் முடிந்திருப்பதும் அளவை நடவடிக்கைகளில் முன்னேற்றம் 148% வரையானதோர் உயரிய வளர்ச்சியை எட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகு உன்னத வளர்ச்சியை இவ்வாண்டில் எட்டத் துணை நின்ற திணைக்களத்தின் சகல சேவைகளையும், சகல மட்டங்களையும் சார்ந்த ஊழியர் குழுவின் அர்ப்பணிப்பான சேவை என்னால் பெரிதும் மதிக்கப்படுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. குறித்த பணிகளை நிறைவேற்றுவதில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலர்களும் சகல தொழிற் சங்க உறுப்பினர்களும் நல்கி வந்த உச்சக் கட்ட ஒத்துழைப்பிற்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

குறித்த ஆண்டில் இப்பெரும் முன்னேற்றத்தை அணுகவும் ,திணைக்களத்தின் மனித வளம் மற்றும் பௌதிக வளம் மேம்படவும் பெரிதும் உதவிய நில அளவையாளர் நாயகமாக பணியாற்றி 2013.07.25 ஆம் திகதி ஓய்வுபெற்ற திரு.எஸ்.எம்.டபிள்யூ.பெர்னாந்து அவர்களதும், 2014.03.06 ஆம் திகதி ஓய்வுபெற்ற திரு.கே.தவலிங்கம் அவர்களதும் அரியசேவையை இவ் வேளையில் இதய பூர்வமாக நினைவு கூர்வதும் என் கடமை என்பதையும் பணிவன்புடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

நிஹால் குணவர்த்தன
நில அளவையாளர் நாயகம்

*இணைப்பு - 01*

குறிப்பிட்ட இந்தக்காலப்பகுதியில் திணைக்களத்தின் செயற்பாடுகளை பின்வரும் பதவியணியினர் மேற்கொண்டார்கள்.

| இல . | பதவிப்பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | கடந்த ஆண்டு இருந்த பதவியணி | ஓய்வு பெற்றவர்கள் | இடமாற்றங்கள் | | ஆட்சேர்ப்பு | பதவியுயர்வு பெற்றவர்கள் | வருடமுடிவில் உறுவலர் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இடமாற்றம் பெற்றவர்கள் வெளியே | இடமாற்றம் பெற்றவர்கள் உள்ளே | | | |
| 1. | நில அளவையாளர் நாயகம் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 2. | மேலதிக நில அளவையாளர் நாயகம் | 03 | 03 | 02 | 01@ | - | - | 03 | 03 |
| 3. | சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் | 05 | 05 | - | 03@ | - | - | 03 | 05 |
| 4. | பிரதி நில அளவையாளர் நாயகம் / மாகாண நில அளவையாளர் நாயகம் | 15 | 15 | 01 | 03 | - | - | 04 | 15 |
| 5. | சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் | 60 | 60 | - | 04@ | - | - | 04 | 60 |
| 6. | நில அளவை அத்தியட்சகர் | 139 | 19 | - | 04@ | - | - | 03 | 22 |
| 7. | உதவி நில அளவை அத்தியட்சகர் / நில அளவையாளர்கள்/பயிற்சி நிலஅளவையாளர் | 850 | 701 | 20 | 03@ | - | - | - | 678 |
| 8. | பிரதம தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 9. | படத் தயாரிப்பு உத்தியோகத்தர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 10. | தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர் | 44 | 33 | 03 | - | - | - | - | 30 |
| 11. | சிரேஷ்ட வரைபடத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் | 56 | 43 | 01 | - | - | - | - | 42 |
| 12. | வரைபடத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் 1 , 11 ,111, பயிலுநர் தரம் | 574 | 244 | 08 | - | - | 86 | - | 322 |
| 13. | வான் அளவை வழிகாட்டி | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 14. | ஒளிப்படவியலாளர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 15. | ஒளிப்படஅளவை தொழில்நுட்பவியலாளர் விசேட தரம் | 04 | 02 | - | - | - | - | - | 02 |
| 16. | ஒளிப்படஅளவை தொழில்நுட்பவியலாளர் 1, 11, III | 26 | 24 | 01 | 03 | | 07 | - | 27 |
| 17. | தொலையுணர்வு தொழில்நுட்பவியலாளர் விசேட தரம் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 18. | தொலையுணர்வு தொழில்நுட்பவியலாளர் 1,11,III , பயிலுநர் தரம் | 13 | 07 | - | - | - | - | - | 07 |
| 19. | வான் ஒளிப்பட ஆய்வுகூட தொ.நுட்பவியலாளர் விசேட தரம் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 20. | வான் ஒளிப்பட ஆய்வுகூட தொ.நுட்பவியலாளர் 1,II,III மற்றும் பயிலுநர் தரம் | 06 | 03 | - | - | - | 02 | - | 05 |
| 21. | கல்லச்சுக்கலை அச்சிடுவோர் விசேட தரம் | 03 | 03 | - | - | - | - | - | 03 |
| 22. | கல்லச்சுக்கலை அச்சிடுவோர் 1,II,III மற்றும் பயிலுநர் தரம் | 15 | 11 | - | 01 | - | - | - | 10 |
| 23. | கிடைப்பட அச்சுக்கலை விசேட தரம் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 24. | கிடைப்பட அச்சுக்கலை 1,II,III மற்றும் பயிலுநர் தரம் | 07 | 03 | - | - | - | - | - | 03 |
| 25. | போக்குவரத்து உத்தியோகத்தர் | 01 | - | - | - | - | - | - | - |
| 26. | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 09 | 03 | - | 02 | - | - | - | 01 |
| 27. | தரவு பதிவு இயக்குனர் | 02 | 01 | - | - | - | - | - | 01 |
| 28. | தரவு இயக்குனர் | 21 | 20 | - | 01 | - | - | - | 19 |
| 29. | சட்ட அலுவலர் | 01 | - | - | - | - | - | - | - |
| 30. | சட்ட உதவியாளர் | 02 | 02 | - | - | - | - | - | 02 |
| 31. | கணணி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் 111 | 01 | - | - | - | - | - | - | - |
| 32. | கணணி முறைமை இயக்குனர் | 02 | 01 | - | - | - | - | - | 01 |
| 33. | கட்டிட மேற்பார்வையாளர் | 01 | - | - | - | - | - | - | - |
| 34. | அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் - தெரிவுத் தரம் | 02 | 01 | - | - | - | - | - | 01 |
| 35. | அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் - 1,II,III | 15 | 09 | - | - | - | - | - | 09 |
| 36. | தச்சுவேலையாளர் 1/11 | 09 | 02 | - | - | - | - | - | 02 |

| இல. | பதவிப்பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | கடந்த ஆண்டு இருந்த பதவியணி | ஓய்வு பெற்றவர்கள் | இடமாற்றங்கள் | | ஆட்சேர்ப்பு | பதவியுயர்வு பெற்றவர்கள் | வருடமுடிவில் அலுவலர் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இடமாற்றம் பெற்றவர்கள் வெளியே | இடமாற்றம் பெற்றவர்கள் உள்ளே | | | |
| 37. | ஓட்டுநர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 38. | உபகரணத் தொழிலாளர் | 04 | - | - | - | - | - | - | - |
| 39. | லொறி சாரதி உதவியாளர் | 07 | 04 | - | - | - | - | - | 04 |
| 40. | படஸ்திரப்படுத்துநரும் புத்தகக் கட்டுநரும் | 04 | 02 | - | - | - | - | - | 02 |
| 41. | படங்களைப் புதுப்பிப்பவர் | 07 | 06 | 02 | - | - | - | - | 04 |
| 42. | வளிசீராக்கி தொழில்நுட்பவியலாளர் | 01 | - | - | - | - | - | | - |
| 43. | மேசன்மார் | 01 | - | - | - | - | - | - | - |
| 44. | பங்களாப் பராமரிப்பாளர்கள் | 05 | 02 | - | - | - | - | - | 02 |
| 45. | ஒளிப்படம் கழுவும் உதவியாளர் | 04 | 03 | - | - | - | - | - | 03 |
| 46. | பிரதி பண்ணல் இயந்திரம் இயக்குநர் | 02 | 01 | - | - | - | - | - | 01 |
| 47. | திணைக்களத் தொழிலாளர்கள் | 170 | 160 | 01 | - | - | - | 01 | 160 |
| 48. | மோட்டார் இயந்திர திருத்துநர் | 02 | - | - | - | - | - | - | - |
| 49. | **மேலதிக நி.அ.நா (மனிதவளம்/ நிர்வாகம்)** | 01 | - | - | - | 01 | - | - | 01 |
| 50. | இலங்கை நிர்வாக சேவை - 1 | 01 | 01 | - | 01 | - | - | - | - |
| 51. | இலங்கை நிர்வாக சேவை - 11 / 11 | 02 | - | - | - | - | - | - | - |
| 52. | இலங்கை கணக்காளர் சேவை வகுப்பு -1 | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 53. | இலங்கை கணக்காளர் சேவை வகுப்பு -11/11 | 12 | 08 | - | 01 | - | - | - | 07 |
| 54. | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 55. | மொழிபெயர்ப்பாளர் | 01 | 01 | - | 01 | 01 | - | - | 01 |
| 56. | **உதவிமொழிபெயர்ப்பாளர்** | 01 | - | - | - | - | - | - | - |
| 57. | அ.மு.உ சேவை - விசேட தரம் | 01 | 01# | - | - | - | - | - | 01 |
| 58. | அ.மு.உ சேவை - வகுப்பு 1/11/111 | 488 | 408 | 7 | 11 | 10 | - | - | 400 |
| 59. | **அபிவிருத்தி உத்தியோகத்தர்** | 160 | - | - | - | - | - | - | 60 |
| 60. | சாரதிகள் 1/11/111 | 276<br>276 | 263 | 6 | 7 | 2 | - | - | 252 |
| 61. | அலுவலக சேவகர்கள் சேவை 1/11/111 | 207 | 100 | 6 | 7 | 20 | - | - | 107 |
| 62. | நில அளவை கள உதவியாளர்கள்- விசேட தரம் | 4154 | 2801 | 123 | - | - | - | - | 2678 |
| 63. | நில அளவை கள உதவியாளர்கள்- வகுப்பு 1 | | | | | | | | |
| 64. | நில அளவை கள உதவியாளர்கள்- வகுப்பு 11 | | | | | | | | |
| 65. | நில அளவை கள உதவியாளர்கள்- வகுப்பு 111 | | | | | | | | |

( @ பதவியுயர்வு பெற்று சென்றது, # ஒப்பந்த அடிப்படை)

*இணைப்பு - 02*

## தாபன விடயங்கள்

| இல | விடயம் | கடந்த வருடம் - 2012 | | | நடப்பாண்டு - 2013 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | மீதி | கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட எண்ணிக்கை | மீதி |
| 01 | ஆட்சேர்ப்பு | 145 | 137 | 08 | 495 | 884 | 389 |
| 02 | நடத்தப்பட்ட பரீட்சை * | | | | | | |
| 03 | நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை | 03 | 03 | - | 08 | 08 | - |
| 04 | பதவியில் உறுதிப்படுத்தப்பட்டது | 298 | 252 | 46 | 196 | 196 | - |
| 05 | பதவியுயர்வுகள் $ | 293 | 293 | - | 86 | 86 | - |
| 06 | சம்பள அதிகரிப்பு கொடுப்பனவு | 4238 | 4191 | 47 | 4808 | 4387 | 328 |
| 07 | சேவை நீடிப்பு | 96 | 96 | - | - | - | - |
| 08 | ஆட்சேர்ப்பு திட்டத்தயாரிப்புகள் | 08 | 08 | - | 06 | 06 | - |
| 09 | பதவி காலி செய்தல் | 06 | 06 | - | 36 | 36 | - |
| 10 | பணி இடைநிறுத்தம் | 02 | 02 | - | 02 | 02 | - |
| 11 | மீண்டும் பதவியில் சேர்த்தல் | 08 | 08 | - | 02 | 02 | |
| 12 | ஒழுக்காற்று விசாரணைகள் | 38 | 04 | 34 | 34 | 07 | 27 |
| 13 | வெளிநாடு செல்ல விடுமுறை அங்கீகாரம் | 46 | 46 | - | 43 | 43 | - |
| 14 | வெளிநாட்டுப் புலமைப் பரிசில் # | | | | | | |
| 15 | அமைச்சரவைப் பிரேரணைகள் | 01 | 01 | - | 03 | - | - |
| 16 | கடன்முறி ஆரம்பித்தல் | 37 | 37 | - | 95 | 95 | - |
| 17 | கடன் முறி விடுவித்தல் | - | - | - | - | - | - |
| 18 | கடன் அனுமதி - சொத்து | 36 | 36 | - | 19 | 19 | - |
| | வாகனம் | - | - | - | - | - | |
| | ஏனையவை | 616 | 134 | 518 | 315 | 148 | 463 |

* நடத்தப்பட்ட ஏனைய பரீட்சை தொடர்பான விபரம் பந்தி 8.3 இல் காட்டப்பட்டுள்ளது.
# வெளிநாட்டுப் புலமைப் பரிசில் பற்றிய விபரம் இணைப்பு 03 இல் காட்டப்பட்டுள்ளது.
$ PL.2 இன கீழ் உள்ளீரபபுச செயறபாடுகள நடைபெறுவதால நில அளவைகள் உதவியாளர பதவி உயரவு தொடரபான விபரஙகள இதில உளளடககப படவிலலை

*இணைப்பு - 03*

**மனிதவள அபிவிருத்தி**

சா்வதேசப் பயிற்சித் திட்டங்களில் நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தா்களின் பங்களிப்பு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**வெளிநாட்டுப் பயிற்சியும் செயலமா்வும் - 2013**

| இல. | புலமைப் பரிசிலின் பெயா் | பெயா் | பதவிப் பெயா் | பயிற்சி பெற்ற நாடு | காலம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | KARI உள்ளக வான்வெளிப் பயிற்சி திட்டம் | திரு.ஜெ.எம்.பீ.பீ.ஜெயசூரிய | சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகா் | கொரியா | 2013-04-22 | 2013-05-04 |
| 2. | KARI உள்ளக வான்வெளிப் பயிற்சி திட்டம் | திரு. டப்.ஏ.எஸ்.விக்கிரமாரச்சி | சிரேஷ்ட பிரதி நிலஅளவை நாயகம் | கொரியா | 2013-04-23 | 2013-05-05 |
| 3. | UNGGIM குறித்த செங்டு மன்ற அமர்வு | திரு.எம்.ஏ.கே.மல்லவாரச்சி | மாகாண நிலஅளவை யாளர் நாயகம் | சீனா | 2013-04-24 | 201-04-26 |
| 4. | 36வது GIG பொது | திரு.கே.தவலிங்கம் | மேலதிக நிலஅளவையாளா் நாயகம் | நைஜீரியா | 2013-05-06 | 2013-05-10 |
| 5. | 2013 -கேம்ப்ரிஜ் மாநாடு UNGGIM | திரு.கே.டபிள்யு.என்.டி.கருண ரட்ண | மேலதிக நிலஅளவை நாயகம் | ஐக்கிய இராச்சியம் | 2013-05-06 | 2013-05-10 |
| 6. | GTC தேசிய படமாக்கல், அளவையியல் திட்டமிடலும் முகாமையும் | திரு.எம்.என்.கெகுலாவல | நிலஅளவை அத்தியட்சகா் | ஜப்பான் | 2013-08-20 | 2013-12-21 |
| 7. | DTM உருவாக்கல் அளவைத் தரவு செயலமர்வு | திரு.டப்.ஜே.கே.ஏ.நிஷான் பிரபாத் | அரச நிலஅளவையாளா் | தாய்லாந்து | 2013-07-22 | 2013-08-22 |
| 8. | DTM உருவாக்கல் அளவைத் தரவு செயலமர்வு | திரு.எஸ்.டீ.கே.பிரியந்த | தொலையுணர்வு தொழில்நுட்பவியலா ளர் | தாய்லாந்து | 2013-07-23 | 2013-08-22 |
| 9. | பயனான அரச காணி நிர்வாக மீட்டல் பாடநெறி | திரு.யூ.கே.எஸ்.பி.விஜேசிங் க | சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகா் | வியட்னாம் | 2013-09-08 | 2013-09-21 |
| 10. | பயனான அரச காணி நிர்வாக மீட்டல் பாடநெறி | திருமதி.கே.கே.பீ.என். பர்ணாந்து | சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகா் | வியட்னாம் | 2013-09-08 | 2013-09-21 |
| 11. | UNGGIM குறித்த செங்டு மன்ற அமர்வு | திரு.டப்.எம். எஸ்.வீரசிங்க | பிரதி நிலஅளவையாளா் நாயகம் | சீனா | 2013-10-15 | 2013-10-17 |
| 12. | எதிர்கால GOV உச்சி மாநாடு 2013 | திரு.பீ.எம்.பீ.உதயகாந்த | சிரேஷ்ட பிரதி நிலஅளவையாளா் நாயகம் | தாய்லாந்து | 2013-10-23 | 2013-10-25 |
| 13. | ஆசிய தொலையுணா்வு சங்க 34வது பொது மாநாடு | திரு.கே.டபிள்யு.என்.டி.கருண ாரத்ன | மேலதிக நிலஅளவையாளா் நாயகம | இந்தோனிசி யா | 2013-10-20 | 2013-10-24 |
| 14. | ஆசிய தொலையுணா்வு சங்க 35வது பொது மாநாடு | திரு.நிஹால் குணவர்தன | மேலதிக நிலஅளவையாளா் நாயகம | இந்தோனிசி யா | 2013-10-20 | 2013-10-24 |
| 15. | 2013 KOICA இலங்கை அளவையியல் படமாக்கல் நிறுவனங்களுக்கான பயிற்சித் திட்டம் | திரு.என்.ஜே.விஜேநாயக்க | சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகா் | கொரியா | 2013-10-20 | 2013-11-09 |
| 16. | 20வது ஆசிய பசுபிக் பிராந்திய விணவெளி நிறுவக பணியக கூட்டத்தொடர் | திரு.கேகே.எஸ்.ரத்நாயக்க | சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகா் | வியட்னாம் | 2013-12-03 | 2013-12-06 |
| 17. | 20வது ஆசிய பசுபிக் பிராந்திய விணவெளி நிறுவக பணியக கூட்டத்தொடர் | திரு.டீ.ஜீ.தர்மபிரிய | சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகா் | வியட்னாம் | 2013-12-03 | 2013-12-06 |
| 18. | JPTM 2013 முதலாவது கூட்டுத்திட்ட அமைப்பாளர் குழுக் கூட்டம் | திரு.எஸ்.கே.விஜேயசிங்க | சிரேஷ்ட பிரதி நிலஅளவையாளா் நாயகம் | தாய்லாந்து | 2013-11-26 | 2013-11-29 |
| 19 | AIT சிறிய செயற்றிட்ட பயிற்சிப் பட்டறை -இரண்டாம் கட்டம் | திருமதி.டீ.டப்.எச்.எம். எல்.எஸ்.ஹெட்டியாரச்சி | வரைபடத்தொழில் நுட்ப உத்தியோகத்தர் | தாய்லாந்து | 2013.12.02 | 2013.12.20 |

## உள்ளூர் பயிற்சி – குறுகிய காலம் - 2013

| | பயிற்சி நெறி | நிறுவனம் | பங்குபற்றியவர்களின் பதவிப்பெயர் | பங்குபற்றிய வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | போக்குவரத்துமுகாமை | திறன் விருத்தி நிதியம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 01 |
| 2. | உயர் கணனிப் பயிற்சிநெறி | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 02 |
| 3. | சுயவிபரக் கோவைகள் பேணுதல் | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 01 |
| 4. | ஒழுக்காற்று நடைமுறைகள் | திறன் விருத்தி நிதியம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் /சட்ட அலுவலர் | 04 |
| 5. | முற்பணக் கணக்கு | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 01 |
| 6. | ஒழுக்காற்று நடைமுறைகள் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 01 |
| 7. | அரசதுறை கணக்குகள்சார் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | இலங்கை பொது நிதியியல் கணக்கு மன்றம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 05 |
| 8. | பொது நிதிமுகாமை | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 02 |
| 9. | 2013 வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளும் 2011,2012 வரிவிலக்குகளும் | திறன் விருத்தி நிதியம் | சி.பி.நி.நா/பி.நி.நா, கணக்காளர் | 18 |
| 10 | அரச முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை ஆரம்பப்பயிற்சி | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 11 |
| 11 | அலுவலக முகாமை | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 03 |
| 12 | சம்பள மாற்றுகைசார் பயிற்சித்திட்டம் | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 03 |
| 13 | கணக்காய்வு விசாரணைகளை குறைத்தலும் அரசநிதி முகாமை விருத்திக்குமான தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | இலங்கை பொது நிதியியல் கணக்கு மன்றம் | தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர்கள் | 10 |
| 14 | விலைமதிப்பிடல் பயிற்சித்திட்டம் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 01 |
| 15 | தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | பொது நிதிசார் கணக்கியல் நிறுவனம் | கணக்காளர் | 01 |
| 16 | தேசிய வளர்ச்சியில் புவி, விண்வெளி தகவல் திட்டம் | புவி, விண்வெளி ஊடக தனியார் நிறுவனம் | சிரேஸ்ட நி.அ. அத்தியட்சகர்/ கணக்காளர்/ வரைபட தொழில் நுட்ப உத்தியோகத்தர/படத் தயாரிப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தர் நிலஅளவையாளர் | 18 |
| 17 | அரச ஆவண நிர்வாகமும் பராமரிப்பும் குறித்த சட்டங்கள் | ஆவணப் பாதுகாப்பு திணைக்களம் | சிரேஸ்ட பி நி.அ.நா பி நி.அ.நா சிரேஸ்ட நி.அ. அத்தியட்சகர் | 04 |
| 18 | வரிச்சட்டத் திருத்தங்கள் பற்றிய மாநாடு | உள்நாட்டு வருமானத் திணைக்களம் | கணக்காளர் | 01 |
| 19 | ஆவண முகாமை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | ஆவணப் பாதுகாப்பு திணைக்களம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் | 03 |
| 20 | அரச பெறுகைகள் நடைமுறைகள் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள | 05 |
| 21 | அலுவலக உதவியாளர்சேவை செயற்றிறன் விருத்திப்பயிற்சி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம | கார்யாலய உதவியாளர் | 01 |
| 22 | இலங்கை தொழில்நுட்பசேவை அலுவலர்களுக்கான பயிற்சி | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | இலங்கைத் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் | 46 |
| 23 | இலங்கை தொழில்நுட்பசேவை அலுவலர்களுக்கான பயிற்சி | அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனம் | இலங்கைத் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் | 26 |
| 24 | இலங்கை தொழில்நுட்பசேவை அலுவலர்களுக்கான பயிற்சி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | இலங்கைத் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் | 20 |
| 25 | சீரிய ஒழுங்கமைப்பும் முறையான கொள்வனவும் | நிர்மானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனம் | கணக்காளர் | 02 |
| 26 | அரசதுறை முகாமைத்துவ அலுவலர்களுக்கான திறன்மிகு முகாமை நிபுணத்துவம் | திறன்விருத்தி நிதியம் | சிரேஸ்ட நி.அ. அத்தியட்சகர் | 05 |
| 27 | இலங்கை தொழில்நுட்பசேவை அலுவலர்களது ஆரம்பப் பயிற்சி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் இணைந்த புதிய உத்தியோகத்தர்கள் | 85 |

## உள்ளூர் பயிற்சி – நீண்ட காலம் - 2013

| | பயிற்சி நெறி | பெயர் | பங்குபற்றியவர்களின் பதவிப்பெயர் | நிறுவனம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 01. | அரச முகாமைத்துவம் பட்டப் பின் படிப்பு | திருமதி .கே.கே.பீ.என்.பர்ணாந்து | சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் | கொழும்புப் பல்கலைக் கழகம் | 02 வருடங்கள் |
| 02. | பூகோளத் தகவல் விஞ்ஞானம் பற்றிய பட்டப் பின் படிப்பு | திரு.ஐ.வெலிகன்ன | அரசாங்க நில அளவையாளர் | கொழும்புப் பல்கலைக் கழகம் | 02 வருடங்கள் |
| 03. | எண்முறை முன் அச்சுக்கலைப் பயிற்சி | திரு.பீ.ஏ.டைட்டஸ் திரு.பீ.விஜேசிங்க | கல்லச்சுக் கலை அச்சாளர்கள் | இலங்கை அச்சக நிறுவகம் | 26 வாரங்கள் |
| 04. | கல்லச்சுக்கலை இயந்திரச் செயற்பாட்டுப் பயிற்சி | திரு.வீ.ஏ.கயான் | கல்லச்சுக் கலை அச்சாளர் | இலங்கை அச்சக நிறுவகம் | 26 வாரங்கள் |
| 05. | தமிழ்மொழிப் பயிற்சி | திணைக்களத்தின் சகல தரங்கள் சார் உத்தியோகத்தர்கள் | அரச கருமமொழிகள் திணைக்களம் | | 216 மணித்தியாலங்கள் |

*இணைப்பு - 04*

## செலவின மதிப்பீடு

| | கடந்த வருடம் (2012) | | | செல வின விகிதா சாரம் | நடப்பாண்டு (2013) | | | செலவின விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவினம் | மீதி | | ஒதுக்கீடு | செலவினம் | மீதி | |
| திட்டம் - 1 கருத்திட்டம் - 1 | | | | | | | | |
| சொந்த வருமானம் | 87,010,000 | 86,096,296 | 913,704 | 99% | 96,500,000 | 89,700,609 | 6,799,391 | 93% |
| ஏனைய மீள்வரும் | 59,805,000 | 58,169,165 | 1,635,835 | 97% | 63,600,000 | 61,815,557 | 1,784,443 | 97% |
| மூலதனம் | | | | | | | | |
| 2001 | 6,000,000 | 4,850,736 | 1,149,264 | 81% | 21,000,000 | 14,866,056 | 6,133,944 | 71% |
| 2002 | 2,400,000 | 2,012,481 | 387,519 | 84% | 2,500,000 | 1,474,180 | 1,025,820 | 59% |
| 2003 | 2,000,000 | 1,554,898 | 445,102 | 78% | 2,400,000 | 1,579,482 | 820,518 | 66% |
| 2102 | 750,000 | 695,858 | 54,142 | 93% | 800,000 | 765,824 | 34,176 | 96% |
| 2103 | 2,300,000 | 1,757,542 | 542,458 | 76% | 2,400,000 | 1,871,728 | 528,272 | 78% |
| 2104 | 60,000,000 | 34,238,476 | 25,761,524 | 57% | 30,000,000 | 29,572,355 | 427,645 | 99% |
| 2401 | 300,000 | 274,550 | 25,450 | 92% | 300,000 | 285,689 | 14,311 | 95% |
| திட்டம் - 2 கருத்திட்டம் - 2 | | | | | | | | |
| சொந்த வருமானம் | 1,453,422,000 | 1,453,111,291 | 310,709 | 100% | 1,567,500,000 | 1,522,278,603 | 45,221,397 | 97% |
| ஏனைய மீள்வரும் | 127,960,000 | 125,553,234 | 2,406,766 | 98% | 144,120,000 | 133,645,525 | 10,474,475 | 93% |
| மூலதனம் - | | | | | | | | |
| 2001 | 10,500,000 | 9,455,277 | 1,044,723 | 90% | 11,000,000 | 9,611,521 | 1,388,479 | 87% |
| 2002 | 13,000,000 | 9,942,937 | 3,057,063 | 76% | 13,000,000 | 10,696,189 | 2,303,811 | 82% |
| 2003 | 13,000,000 | 11,016,789 | 1,983,211 | 85% | 13,500,000 | 12,818,492 | 681,508 | 95% |
| 2102 | 1,300,000 | 1,052,122 | 247,878 | 81% | 1,500,000 | 1,463,427 | 36,573 | 98% |
| 2103 | 23,000,000 | 12,931,960 | 10,068,040 | 56% | 25,000,000 | 18,450,047 | 6,549,953 | 74% |
| 2401 | 250,000 | 198,750 | 51,250 | 80% | 300,000 | 300,000 | - | 100% |
| 2502 | 15,000,000 | 5,988,350 | 9,011,650 | 40% | 10,000,000 | 6,441,884 | 3,558,116 | 64% |
| திட்டம் - 2 கருத்திட்டம் - 3 | | | | | | | | |
| சொந்த வருமானம் | 64,490,000 | 64,379,269 | 110,731 | 100% | 67,600,000 | 63,974,261 | 3,625,739 | 95% |
| ஏனைய மீள்வரும் | 5,420,000 | 5,305,254 | 114,746 | 98% | 6,490,000 | 6,287,053 | 202,947 | 97% |
| மூலதனம் - | | | | | | | | |
| 2001 | 1,300,000 | 1,180,683 | 119,318 | 91% | 1,300,000 | 1,299,664 | 337 | 100% |
| 2002 | 500,000 | 455,000 | 45,000 | 91% | 500,000 | 478,358 | 21,642 | 96% |
| 2003 | 1,100,000 | 1,000,000 | 100,000 | 91% | 1,200,000 | 1,200,000 | - | 100% |
| 2102 | 150,000 | 144,842 | 5,158 | 97% | 200,000 | 197,715 | 2,285 | 99% |
| 2103 | 150,000 | 16,800 | 133,200 | 11% | 200,000 | 199,542 | 458 | 100% |
| 2401 | 160,000 | 139,000 | 21,000 | 87% | 200,000 | 199,619 | 381 | 100% |
| மொத்தம் | **1,951,267,000** | **1,891,521,561** | **59,745,439** | **97%** | **2,083,110,000** | **1,991,473,378** | **91,636,622** | **96%** |

*இணைப்பு - 05*

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண "பி" கணக்கு

| எல்லை | கடந்த வருடம் - 2012 | | நடப்பாண்டு - 2013 | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு | உண்மையானது | மதிப்பீடு | உண்மையானது |
| செலவின உச்சவரம்பு | 150,000,000 | 64,482,909 | 155,000,000 | 96,459,955 |
| கடன் இழிவெல்லை | 100,000,000 | 121,282,018 | 100,000,000 | 107,982,493 |
| வரவுகளின் உச்சவரம்பு | 432,000,000 | 305,597,630 | 492,000,000 | 294,075,092 |

| | வருடம் 2012 | வருடம் 2013 |
|---|---|---|
| வரவுக்காசு | 48,828,290 | 81,011,403 |
| ஏனைய திணைக்களங்களிலிருந்து வரவு | 15,654,620 | 15,448,552 |
| | | |
| காசுச் செலவு | 108,589,405 | 98,787,516 |
| ஏனைய திணைக்களங்களினால் செலவு | 12,692,613 | 9,194,977 |

*இணைப்பு - 06*

வருமானக்கணக்கு

| | கடந்த வருடம் - 2012 | நடப்பு வருடம் - 2013 |
|---|---|---|
| மதிப்பீடு | 90,000,000 | 112,000,000 |
| வருட வருமானம் | 131,620,213 | 132,827,068 |
| வித்தியாசம் (+ / -) | 41,620,213 | 20,827,068 |

*இணைப்பு - 07*

## பௌதீகவளங்கள் முகாமைத்துவம்

### அசைவற்ற சொத்துக்கள்


| தொடர் இல | சொத்துக்களின் வகை | ஆண்டு ஆரம்பத்தில் நிலை | இந்த ஆண்டில் இடம்பெற்ற மாற்றங்கள் | | | | ஆண்டு முடிவில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | சுவீகரித்தல் | வாங்கல் | ஏலத்தில் விடப்பட்டது | அகற்றப் பட்டது | |
| 01 | காணி (ஹெக்ரேயரில்) | 73.4181 | - | - | - | - | 73.4181 |
| 02 | கட்டடங்கள் | 182 | - | - | - | - | 182 |
| 03 | நிர்மாணிப்புகள் | 07 | 02 | - | - | - | 09 |

அசையும் சொத்துக்கள்

| இல | சொத்துக்களின் வகை | ஆண்டு ஆரம்பத்தில் நிலை | இந்த ஆண்டில் இடம்பெற்ற மாற்றங்கள் | | | | ஆண்டு முடிவில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | தேட்டம் | வாங்கல் | விற்பனை | அகற்றப் பட்டது | |
| 01 | மோட்டார் லொறிகள் | 07 | - | - | - | - | 07 |
| 02 | மோட்டார் லொறிகள்(சிறியது) | 40 | - | - | - | - | 40 |
| 03 | மோட்டார் காரகள் | 05 | - | - | - | - | 05 |
| 04 | ஜீப்கள் | 62 | - | - | - | - | 62 |
| 05 | டபிள் கெப்ஸ் | 149 | - | - | - | - | 149 |
| 06 | வான்கள் | 29 | - | - | - | - | 29 |
| 07 | முச்சக்கரவண்டி | 01 | - | - | - | - | 01 |
| 08 | ரக்ரர் | 05 | - | - | - | - | 05 |
| 09 | பௌசர்கள் | 01 | - | - | - | - | 01 |
| 10 | துவிச்சக்கர வண்டி | 41 | - | - | - | - | 41 |
| 11 | டுப்பிளிக்கெற்றிங் இயந்திரம் | 28 | - | - | - | - | 28 |
| 12 | பிரதி பண்ணும் இயந்திரம் | 139 | - | 20 | 16 | - | 143 |
| 13 | கணனிகள் | 792 | - | 97 | - | - | 889 |
| 14 | கணனி பிரின்டர்ஸ் | 497 | - | 51 | 75 | - | 473 |
| 15 | லாப் டொப் கணணிகள் | 102 | - | 11 | 4 | - | 109 |
| 16 | தொலை நகல் இயந்திரம் | 118 | - | 18 | 12 | - | 124 |
| 17 | தட்டச்சு இயந்திரம் (Manual) | 150 | - | - | 26 | - | 124 |
| 18 | காப்புப் பெட்டகம் | 25 | - | - | - | - | 25 |
| 19 | படம் எடுக்கும் கருவி (செய்முறை, வான்) | 02 | - | - | 1 | - | 1 |
| 20 | கல்லச்சு அச்சிடும் இயந்திரம் | 05 | - | - | - | - | 05 |
| 21 | தொலைக்காட்சிப் பெட்டி | 07 | - | 2 | - | | 9 |
| 22 | குளிர்சாதனப் பெட்டி | 12 | - | - | - | - | 12 |
| 23 | கடதாசி வெட்டும் இயந்திரம் | 03 | - | - | - | - | 03 |
| 24 | ஒளிப்பட அளவை குறிக்கும் கருவி | 10 | - | - | - | - | 10 |
| 25 | பூரணமானி உபகரணங்கள் | 375 | - | 25 | - | - | 400 |
| 26 | தியோடலைற்று அளவை உபகர ணம் | 1004 | - | - | - | - | 1004 |
| 27 | நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கிய கல்குலேற்றர்கள் (கணிப்பொறி) | 592 | - | - | - | - | 592 |
| 28 | பெரிய சீர் செய்யும் கருவி (Scanners) | 03 | - | 1 | - | - | 4 |
| 29 | ஒளிப்பட அளவைகுறிக்கும் கருவிகள் (எண்முறை) | 02 | - | - | - | - | 2 |
| 30 | உருக்கு நாடாக்கள் | 689 | - | 170 | 1 | - | 858 |
| 31 | **கணனிசேவையகம்** | - | - | 1 | - | - | 1 |
| 32 | **ஒலி ஒளித்தொகுதி** | | - | 1 | - | - | 1 |
| 33 | **பல்லூடக படக் காட்டி** | - | - | 10 | - | | 10 |


## நிலஅளவைத் திணைக்களத்தின் நிர்வாக கட்டமைப்பு - 2013

இணைப்பு - 08




| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேலதிக.நி.நா | - | மேலதிக நிலஅளவையாளர் நாயகம் | ப.த.உ | - | படத் தயாரிப்பு உத்தியோகத்தர் | கா.உ.ப | - | காணி உரித்துப் பதிவு |
| சி.பி.நி.நா | - | சிரேஷ்ட பிரதி நிலஅளவையாளர் நாயகம் | க.உ | - | கட்டிடமும் உபகரணமும் | த.அ | - | தலைமை அலுவலகம் |
| பி.நி.நா | - | பிரதி நிலஅளவையாளர் நாயகம் | ஆ.மு. & தொ.நி. | - | ஆவண முகாமை & தொழில்சார் நியமம் | வா.அ | - | வான் அளவை |
| சி.நி.அ | - | சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் | பு.பா | - | புவிப்பாத்து | தொ.தொ.நி | - | தொலையுணர்வு தொழில்நுட்பத்திற்கான நிலையம் |
| நி.அ | - | நிலஅளவை அத்தியட்சகர் | ஆ.அ. | - | ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | கா.த.மு/ பூ.த.மு | - | காணித் தகவல் முறை / பூகோள தகவல் முறைமை |
| பி.தொ.நி.உ | - | பிரதான தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர் | பெ.வ | - | பெறுகைகள், வழங்கல்கள் | பூகோ.பெயர் | - | பூகோளவியலுக்குரிய பெயர்கள் |
| தொ.நி.உ | - | தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர் | பி.நி.உ | - | பிரதான நிர்வாக உத்தியோகத்தர் | | | |

## 1:10,000 எனும் அளவிடையிலான டிஜிற்றல் பிரதேசவியல் தரவுத் தளம்




### குறியீட்டு விளக்கம்

- வான்முறை ஒளிப்படங்களிலிருந்து பெறப்பட்ட தரவு (2006/2007)
- JICA + நிஅதி பூரணப்படுத்திய தரவுகள் (2010-2011)
- செய்மதி விம்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது (2009)
- செய்மதி விம்பத்தைப் பயன்படுத்தி நாளது வரைப்படுத்தப்பட்டது (2009)
- வான்முறை ஒளிப்படங்களிலிருந்து பெறப்பட்ட தரவு (1994 - 2006)
- கையெழுத்துப் பிரதிகளிலிருந்து பெறப்பட்ட தரவு (1982 -1994)
- அச்சிடப்பட்ட படங்களிலிருந்து பெறப்பட்ட தரவு (1982 -1994)

(அடைப்புக் குறிகளுக்குள் உள்ள ஆண்டுகள் படமெடுக்கப்பட்ட /செய்மதி விம்பம் பெறப்பட்ட ஆண்டுகளைக் குறிக்கும்.)

### தற்போதுள்ள அடுக்குகள்


போக்குவரத்து
நீரியல்
காணிப் பயன்பாடு
கட்டிடம்
ரொப்போநோமி (இடங்களின்பெயர்கள்)
நிர்வாக எல்லைகள்
தரைத்தோற்றம் (செய்மதி விம்பங்களிலிருந்து தரவுகள் கிடைக்கப்பெறவில்லை)

### தற்போதுள்ள தரவு அமைப்புகள்

Geodatabase
Shapefile

## பிம்சவியத் திட்டம் 2013 (பிரதேச செயலகரீதியில் கடத்திரள் அளவைகள்)

01நெடுந்தீவு
02.நல்லூர்
03.கண்டாவளை
04.கரச்சி
05.கரைத்துறைப்பற்று
06.துணுக்காய்
07.முசலி
08.வவுனியா(வடக்கு)
09.வவுனியா(தெற்கு)
10.நுவரகம்பலாத்த-மத்தி
11.இராஜாங்கனை
12.தலாவ
13.தம்புத்தேகம
14.நுவரகம்பலாத்த-கிழக்கு
15.மெதிரிகிரிய
16.இலங்காபுர
17.ஹிங்குரக்கொடை
18.வெலிகந்தை
19.திருக்கோணாலை நகர்-
எல்லைகளுடன்
20. கிண்ணியா
21. கந்தளாய்
22. ஈச்சிலம்பற்று வெருகல்
23. ஏறாவூர் பற்று (செங்கலடி)
24.மண்முனை வடக்கு
(மட்டக்களப்பு நகரம்)
25. கொரளைப் பற்று தெற்கும்
மத்தியும்
26.சம்மாந்துறை
27.அம்பாறை (நாமல் ஓயா)
28.பொத்துவில்
29.கலேவெல
30.தம்புள்ளை
31.பல்லெபொல
32.ஹாரிஸ்பத்துவ
33.கண்டி எல்லைகளுடன்
34.உடுநுவர
35.யட்டிநுவர
36.உடபலாத்த
37.தொளுவ
38.கொத்மலை
39.நுவரெலியா
40.வனாத்தவில்லு
41.கற்பிட்டி
42.முந்தல்
43.வென்னப்புவ
44.குளியாப்பிட்டி மேற்கு
45.குருநாகல்
46.ரிதீகம
47.பன்னல
48.மல்லவப்பிட்டி
49.நீர்கொழும்பு
50.கட்டான
51.திவுலப்பிட்டி
52.மீரிகம
53.அத்தனகல்லை
54.மினுவாங்கொடை
55.வத்தளை
56.ஜா-எல
57.கம்பஹா
58. மஹர - கடவத்தை
59.தொம்பே வேக்கே
60.பியகம
61.களனி
62.கொழும்பு
63.ஹோமாகம
64.ஹங்வெல்ல
65.மஹரகம
66.ஸ்ரீ ஜயவர்த்தனபுர
கோட்டே
67.மொரட்டுவை
68.கஸ்பாவை
69.இரத்மலானை
70.திம்பிரிகஸ்யாய
71.பாதுக்கை
72தெகிவளை - கல்கிஸ்ஸை
73.பாணந்துறை
74. ஹொரணை
75.களுத்துறை
76.மத்துகமை
77.கலிகமுவ
78.வரக்காப்பொல
79. எகலியகொடை
80.குருவிட்ட
81.இரத்தினபுரி
82.பலாங்கொடை
83.வெலிகேபொல
84. கிரியெல்ல
85.மகியங்கனை
86.ரிதீமாலியத்த
87.மொனராகலை
88.சியம்பலாண்டுவ
89.ஹிக்கடுவை
90.காலி-
(எல்லைகளுடன்)
91.வெலிகமை
92.மாத்தறை
எல்லைகளுடன்
93.அம்பாந்தோட்டை
94.சூரியவெவ
95.லுணுகம்வெஹர
96.திஸ்ஸமகராமை
97.பெலிஅத்த




0 12.5 25 50 75 100 Kilometers

தேசிய காணி உரித்துப் பதிவுச்செயற்றிட்டம்
காணி,காணி அபிவிருத்தி அமைச்சு
இலங்கை நிலஅளவைத்திணைக்களம்